Registered as a Newspaper in Ceylon ★ விலை சதம் 10

# ஈழநாடு

EELANADU

தபால்பெட்டி எண் 49
போன் 389

National Tamil Daily

மலர் 9
இதழ் 336
தேசிய தினசரி

யாழ்ப்பாணம் பிலவங்க ஐப்பசி 19 ஷஃபான் 2 ஞாயிற்றுக்கிழமை [5-11-67]

பாவனைக்குச் சிறந்தது
டொலர் மார்க்
அலுமினியப் பாத்திரங்கள்



டொலர் கோர்ப்பரேஷன்
4, டாம் வீதி, கொழும்பு

# ரூ10.000 உதவி; ஆசிய நிறுவனம் வழங்குகிறது

## மிருசுவிலில் படித்த பெண்கள் குடியேற்றத் திட்டத்துக்கு

யாழ்ப்பாணம், ஞாயிறு
மிருசுவில் படித்த பெண்கள் குடியேற்றத் திட்டத்திற்கு சுமார் 10,000 ரூபாய் பெறுமதியான உபகரணங்களை ஆசிய நிறுவனம் அன்பளிப்பாக வழங்கும். இத்தகவலை நேற்று இங்கு விஜயம் செய்த ஆசிய நிறுவன டைரக்டர் திரு. ஜேம்ஸ் எச். நொய்ஸ் தெரிவித்தார்.

யாழ். மாவட்ட உதவி அரசாங்க அதிபர் திரு. ரி. முருகேசம் பிள்ளையுடன் திரு. நொய்ஸ் நேற்றுக் காலை மிருசுவில் படித்த பெண்கள் குடியேற்றத்திட்டத்துக்கு விஜயம் செய்தார். இதனைப் பார்வையிட்ட அவர் இங்கு குடியேறியிருக்கும் படித்த பெண்களின் தேசியத் தொண்டைப் பாராட்டினார்.

இதுபற்றி திரு. நொய்ஸ் இங்கு குறிப்பிட்டதாவது:

விவசாயத்தில் ஈடுபட்டு நாட்டின் உப உணவுத் தட்டுப்பாட்டை நீக்குவது ஒரு தேசியத் தொண்டாகும். இதனைப் பலன் கருதாது ஒவ்வொருவரும் செய்ய முன்வரவேண்டியது அவர்களது கடமையாகும். இப்பணியில் யாழ்ப்பாண மக்கள் பண்டு தொட்டு காட்டி வரும் ஆர்வத்தை நான நன்கு அறிவேன். படித்த வாலிபர்கள் மாத்திரமின்றி, படித்த பெண்களும்கூட இத்தொண்டில் ஈடுபட்டிருப்பதைக் காண்பதில் நான் மகிழ்ச்சியடைகின்றேன். இப்பெண்கள் திட்டத்தை இலங்கை அரசாங்கம் முதலாவதாக இப்பகுதியிலேயே ஆரம்பித்திருப்பது மிகவும் பொருத்தமானதாகும் என்பதே எனது கருத்து.

இத்திட்டத்துக்கு ஆசிய நிறுவனத்தின் சார்பில் சுமார் 10,000 ரூபா பெறுமதியான உபகரணங்களை வழங்குவது மிகவும் நன்மை பயக்கக் கூடியதாகவிருக்கும். முதலில் இரண்டு தையல் மெஷின்களையும், கையால் இயக்கும் 'ட்ராக்டர்' ஒன்றையும் இதற்கு நான் கூடிய கெதியில் அனுப்பி வைப்பேன் என உறுதி கூறுகின்றேன்.

இங்குள்ள பெண்கள் இவருககு தேநீர் விருந்தளித்துக் கௌரவித்தார்கள். (ந நி.)

## முட்டைவீச்சு சம்பவத்தில் கைதானவருக்கு ரிமாண்ட்

யாழ்ப்பாணம், ஞாயிறு
யாழ்ப்பாண பொது ஜன நூலகத்தின் சிறுவர் பகுதி திறப்பு விழாவின் போது, அமெரிக்க ஸ்தானிகரின் காருக்கு, ஒரு கோஷ்டியினரால் முட்டைகளும், செருப்புகளும் வீசப்பட்ட சம்பவத்தில் பொலிஸாரால் கைது செய்யப்பட்ட சந்தேக நபரான எஸ். சி. கந்தசாமி என்ற வாலிபரை யாழ்ப்பாணம் பொலிஸார், நேற்றுக்காலை யாழ்ப்பாணம் மாஜிஸ்திரேட் திரு. ஜமீல் முன்னிலையில் ஆஜர் செய்தனர்.

சந்தேக நபர், மக்கள்மீது முட்டை வீசியதாக பொலிஸார் தெரிவித்தனர். சந்தேக நபர் சார்பில் ஆஜரான புறக்டர் ஏ. அன்ரனி, சந்தேக நபர் முட்டை வீசவில்லையென்றும் சுலோகங்களை கோஷித்தாரென்றும் தெரிவித்தார்.

மாஜிஸ்திரேட் சந்தேக நபரை இம்மாதம் 7-ம்தேதி வரை ரிமாண்டில் வைக்குமாறு உத்தரவிட்டார்.

## தடை உத்தரவு

கொழும்பு, சனி
அரசாங்க குமாஸ்தாக்கள் சேவைச் சங்கத் தலைவர் திரு. ஐ. ஜே. விக்கிரமா தற்காலிக வேலை நீக்கம் செய்யப்பட்டிருப்பதால் வருமான வரிக் காரியாலயத்துக்குள் அவர் வருவது தடை செய்யப்பட்டிருப்பதாக அவருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

## ஜே. ஆர் லண்டன் செல்கிறார்

கொழும்பு, சனி
ராஜாங்க அமைச்சர் திரு. ஜே. ஆர் ஜயவர்த்தன இம்மாதம் 15-ந் திகதி லண்டனுக்குப் பிரயாணமாகிறார்.

## அப்பம் வாங்கச்சென்ற சிறுவன் லொறிக்குப் பலி

யாழ்ப்பாணம், ஞாயிறு
அப்பம் வாங்கக் கடைக்குச் சென்ற மாணவன் லொறியால் மோதுண்டு ஸ்தலத்திலேயே மரணமானார். இப்பரிதாப சம்பவம் நேற்றுக்காலை யாழ்ப்பாணம் கோவில் வீதியிலுள்ள புகையிரதக் கடவைக்கு அருகாமையில் நடைபெற்றது.

யாழ்ப்பாணம் சென். பற்றிக்ஸ் கல்லூரியின் மாணவனான ஜெயாசவரிமுத்து என்பவரே இறந்த சிறுவனாவார். இச்சிறுவன் நேற்றுக்காலை கல்லூரிக்குப் போவதற்கு முன்னர் கடைக்கு அப்பம் வாங்கச் சைக்கிளில் சென்ற போது வீதியில் லொறியொன்றினால் மோதுண்டு மரணமானதாக மரண விசாரணையில் தெரிவிக்கப்பட்டது.

யாழ்ப்பாணம் தற்காலிக மாஜிஸ்திரேட் திரு. [illegible] ரெட்துரையப்பா இம்மர [illegible]

[8-ம் பக்கம் பார்க்க]

## பூன்வாட்மீது பர்மாவில் வழக்குத் தொடரப்படும்

கொழும்பு, சனி
இலங்கையில் பர்மிய தூதுவராகக் கடமையாற்றிய திரு. சூ-பூன்வாட் மீது கொலைக்குற்றம் சுமத்தப்பட்டு ரங்கூன் நீதிமன்றத்தில் விரைவில் வழக்குத் தாக்கல் செய்யப்படுமென்று கொழும்புக்குக் கிடைத்த தகவல்களிலிருந்து தெரிய வருகிறது.

திருமதி ஷேர்லி பூன்வாட்டை சுட்டுக் கொலை செய்ததாக திரு. சூ-பூன்வாட் மீது குற்றம் சாட்டி பர்மிய நீதிமன்றத்தில் வழக்குத்தாக்கல் செய்யப்படுமென்றும், திருமதி பூன்வாட் மரணம் சம்பந்தமாக ஆராய்வதற்காக இலங்கை வந்த பர்மிய பொலிஸ் அதிகாரி தமது பூர்வாங்க விசாரணைகளை முடித்துக் கொண்டு விட்டதாகவும் விரைவில் இலங்கையிலிருந்து பர்மாவுக்குத் திரும்ப விருப்பதாகவும் அறியப்படுகிறது. அந்த அதிகாரி இலங்கைப் பொலிஸ் இன்ஸ்பெக்டர் ஜெனரல் திரு. அலரிக் அபய குணவர்த்தனவைச் சந்தித்து நீண்ட நேரம் பேசினார்.

1. யானை மார்க் நம்பர் 1 சீமென்ஸ
ஓடிகொலோன் சிசு பரிபாலிப்புக்கும், நோயாளிகள் அறைக்கும், குளிக்கும் அறைக்கும்.
மறவாதீர்—சீமென்ஸ்.

2. சீமென்ஸ்— வாசனை செவ்விளநீர் தேங்காயெண்ணெயும் ஆமணக்கெண்ணை கூந்தல் வளரும் தைலமும் உங்கள் உரோமத்தை செழிப்பாகவும் சிறப்பாகவும் வளர்க்கும்.

3 சீமென்ஸ் புத்தராஜா தைலம்
தலையிடியை ஒரு நிமிடத்தில் நிறுத்திவிடும். எல்லாவிதமான தலையிடிகளுக்கும் பீநசம் சம்பந்தமான சகல நோய்களுக்கும் சிறந்த ஔஷதம்.

இலங்கையிலுள்ள சகல பிரசித்திபெற்ற வியாபாரிகளிடமும் கிடைக்கும்.

**சீமென்ஸ் பற்பொடி:** தினமும் சீமென்ஸ் பற்பொடியால் உங்கள் பற்களை துலக்குங்கள். பல் சூத்தை முதலிய எல்லா பல், வாய் நோய்களையும் குணப்படுத்தும் ஓர் ஆயுர்வேத தயாரிப்பு. நல்ல பற்களில் சூத்தை தொற்றுதபடி அவற்றை பாதுகாத்து இறுகப்பண்ணும். பற்களை வெண்மையாக்கும். நச்சுக் கலப்பிலலாதது.

ஒரு பாக்கெட் 60 சதம்,

வந்தபின் காப்பதிலும் வருமுன் காத்தல் நன்று
இதுதான் நிவாரணம்:
**சீமென்ஸ் கடுக்காய் குளிகைகள்**
இவற்றில் ஒரு பாக்கெட்டை வைத்துக்கொண்டு வயிற்றுக்குழப்பம், தலைவலி வரும்போது உபயோகிக்கவும். ஒரு பாக்கட் ரூ. 1/20, தபால் செலவு 60 சதம்.

**சீமென்ஸ் ஓடிகொலோன்**
1 அவுன்ஸ் போத்தல் ரூ. 1-25
2 அவுன்ஸ் போத்தல் ரூ. 2-25

**சீமென்ஸ் ஆமணக்கெண்ணை கூந்தல் தைலம்**
4 அவுன்ஸ் போத்தல் ரூ. 2-00
8 அவுன்ஸ் போத்தல் ரூ. 3-50

**சீமென்ஸ் செவ்விளநீர் தேங்காயெண்ணை கூந்தல் தைலம்**
4 அவுன்ஸ் போத்தல் ரூ. 1-10
8 அவுன்ஸ் போத்தல் ரூ. 2-00

**சீமென்ஸ் பற்பொடி**
1 பாக்கெட் -/60 சதம்

**சீமென்ஸ கடுக்காய் குளிகைகள்**
100 குளிகை போத்தல் ரூ. 3-50
250 குளிகை போத்தல் ரூ. 8-50
500 குளிகை போத்தல் ரூ. 15-00

**சீமென்ஸ புத்தராஜ தைலம்**
1 அவுன்ஸ் போத்தல் ரூ. 1-35
6 அவுன்ஸ் போத்தல் ரூ. 3-25

வியாபாரிகளுக்கு விசேஷ சலுகைகள்

**சீமென் பிரதர்ஸ்,**
234, 5-ம் குறுக்குத்தெரு,
புறக்கோட்டை, கொழும்பு—11

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வரி விளம்பரம்

### விற்பனைக்கு

காணிகள் விற்பனைக்கு!

புங்குடுதீவு மடத்து வெளியிலுள்ள வீடும் அதனடங்கிய வயல்களும், கம்புலியன் இறுபிட்டி-நாவத்தாள் ஆகிய நெல்வயல்களும் விற்பனைக்குண்டு. உடனடியாக தொடர்பு கொள்ளவும்: S. ஆறுமுகம், 7-ம் வட்டாரம், புங்குடுதீவு.
2101

### தேவை

காஷியர்...


ரொக்கப்பிணை கட்டக்கூடிய காஷியரும், விற்பனையாளரும் தேவை. ஆண்-பெண் இருபாலகரும் நேரில் விண்ணப்பிக்கவும். விஜயகம் இன்டஸ்றீஸ், வெலிங்டன் சந்தி, யாழ்ப்பாணம்.
2103

**REGAL** JAFFNA
Daily at
4-45 7-00 And
9-45 p. m. Only
Rod Taylor
in
**THE LIQUIDATOR**
Panavsion Color

**நியூ காலிங்கன்**
[இணுவில்]
தினசரி 6-30, 9-30 மணி
விடுமுறைதினங்களில் 2-30
ரவிச்சந்திரன்- ஜெயலலிதா
நடித்த
**குமரிப்பெண்**

# "கிழக்கிலங்கை தமிழ்க் களஞ்சியம்"

## மட்டக்களப்பு தமிழ்ச்சங்க விழாவில் பட்டிருப்பு எம். பி.



களுவாஞ்சிக்குடி, சனி

கிழக்கிலங்கை நெற்களஞ்சியமாக இருந்து வந்துள்ளதுடன் கூடவே தமிழ்க் களஞ்சியமாக அமைந்து வந்துள்ளது. இதனை தக்கவாறு வெளிப்படுத்தும் பணியில் நமது அறிஞர்களின் கூட்டு முயற்சியும், ஆராய்ச்சிப் பணியும் தேவையாக 'இருக்கிறது. மட்டக்களப்புத் தமிழ்ச் சங்கம் இத் தேவையை நிறைவேற்றும் என்று நம்புவோம்."

இவ்வாறு தீபாவளித் தினத்தன்று மட்டக்களப்பு பட்டிருப்பு மகாவித்தியாலய மண்டபத்தில் நடைபெற்ற மட்டக்களப்புத் தமிழ்ச் சங்க ஆரம்பக் கூட்டத்தில் பேசிய கிழக்கிலங்கையின் சிரேஷ்ட அரசியல் வாதியும் பட்டிருப்பு எம். பியுமான திரு. சி. மு. இராசமாணிக்கம் குறிப்பிட்டார்.

கிழக்கிலங்கையின் பல பாகங்களிலிருந்து தமிழ் அபிமானிகளும் கலந்துகொண்ட இக் கூட்டத்திற்கு புலவர் மணி ஏ. பெரியதம்பிப் பிள்ளை தலைமை தாங்கினுர்.

திரு. இராசமாணிக்கம் தமது உரையில் மேலும் கூறியதாவது:- இப் பிரதேசத்தின் வரலாறும், கலாச்சார மேன்மையும் சரிவர அறியப்படாமல் இருப்பது துரதிருஷ்டமானது. இதனை நிவர்த்திசெய்து பணி புரியும் முயற்சியில் ஆற்றலும் அறிவும் மிக்க நம் தமிழ் அறிஞர்களும் ஆராய்ச்சித் துறையில் நாட்டம் செலுத்தும் தமிழ் இளைஞர்களும் இங்கு ஆரம்பிக்கப்படும் சங்கத்தில் கூடி உழைப்பது வேண்டற்பாலது.

மட்டக்களப்புத் தமிழ்ச் சங்கத்தின் புதிய நிர்வாகிகளாகப் பின்வருவோர் தெரிவு செய்யப்பட்டனர்.

காப்பாளர்- திரு. சி. மு இராசமாணிக்கம் எம். பி. அரசாங்க அதிபர் திரு.எஸ். கதிர்காமநாதன், பண்டிதர் ஆ. சபாபதி, ஆசிரியமணி சாமித்தம்பி, திருமதி கமலபூசணி திருநாவுக்கரசு. தலைவர்:- புலவர்மணி ஏ. பெரியதம்பிப்பிள்ளை, உபதலைவர்கள்:- பண்டிதர் வி. சி.கந்தையா, பண்டிதர் க்.சந்திரசேகரி, ஜனுப் ச. மு. சரீப்தீன் பொதுக்காரியதரிசி:- வித்துவான் க. செபரத்தினம், பிரதேச காரியதரிசிகள்:-பண்டிதர் சி. தம்பிராசா, பண்டிதர் வி. ரி. சின்னத்துரை, திரு. சி. மௌனகுரு, ஜனுப் அப்துல்ஸமது, பொருளாளர்:- பண்டிதர் தம்பிப்பிள்ளை. ஒன்பதுபேர் நிர்வாகசபை உறுப்பினர்களாகத் தெரிவு செய்யப் பட்டனர்.

**மனோகரா**
யாழ்ப்பாணம்
மாலை 6-30,
இரவு 9-30 மணிக்கு
**சோபனசித்தி**
SOBANASITHA
(சிங்களம்)

**7 - 11 - 67 முதல்**
பிற்பகல் 2-30, மாலை
6-30, இரவு 9-45 மணிக்கு
தேவானந், சைராபானு,
சசிகலா நடித்த
**பியார் மொகபாட்**
PYAR MOHABBAT
ஈஸ்மன் கலர்
இசை:- சங்கர், ஜெயகிஷர்

## தபால் சேர 5 மாதம்

முல்லைத்தீவு, சனி

கொழும்பிலிருந்துகாணிக் கமிஷனர் வவனியா வடக்குப் பிரிவைச்சேர்ந்த தண்டுவான் வாசியான விசுவலிங்கம்-இரத்தினசிங்கம்என்பவருக்கு 4-5-67-ந்திகதிஅனுப்பிய பதிவுத் தபால் ஐந்து மாதத்துக்குப்பின் சென்ற மாதக் கடைசியில் தான் குறித்த நபருக்கு கிடைத்ததாம். இது பற்றி பிரதம [illegible] அதிபருக்கு புகார் செய்யப்பட்டுள்ளதாம்.

**இப்பொழுது நடைபெறுகிறது**
**வெலிங்டன்** [யாழ்ப்பாணம்]
தினசரி பி.ப. 2-30, மாலை 6-20, இரவு 9-30 மணிக்கு
**பிளாஸா** [வெள்ளவத்தை] — **கெப்பிட்டல்** [கொழும்பு]
**மைலன்** [கொட்டாஞ்சேனை]
**விஜயா** [மட்டுநகர்] — **ஸ்ரீகிருஷ்ணு** [திருமலை]
மற்றும் நாலு திரைகளில்
**எம். ஜி. ஆரும், ஜெமினி கணேசனும்**
முதல்முறையாக சேர்ந்து நடித்து வெற்றி கண்ட இன்பச் சித்திரம்!
கடமைக்கும் பாசத்திற்கும் நடுவே சிக்கித்தவிக்கும் ஒரு பொலிஸ் அதிகாரியின் உணர்ச்சியூட்டும் சித்திரம்! 100 நாட்களுக்கு மேல் ஓடி தென்னகத்தில் பல்லாயிரக் கணக்கான மக்களின் பாராட்டைப் பெற்ற சித்திரம்.



மற்றும்
ஜெயலலிதா, ஜெய்ந்தி
நம்பியார், அசோகன்,
நாகேஷ், ஸ்ரீராம்,
மனோரமா,
பி. கே. சரஸ்வதி
நடித்த
தேவர் பிலிம்ஸ்
# முகராசி
டைரக்ஷன் எம். ஏ. திருமுகம்
இசை: திரை இசைத்திலகம் கே. வி. மகாதேவன்

**6-வது வாரம்**
**கிங்ஸ்லி** [கொட்டாஞ்சேனை] — **லக்ஷ்மி** [கரவெட்டி]
ஜெய்சங்கர் — ஜமுனு — நாகேஷ் — பேபி பத்மினி
நடித்த
ஏ. வி. எம்மின் ஜனாதிபதி பரிசுபெற்ற
**குழந்தையும் தெய்வமும்**

# 'தூக்கிச் சென்று என்னை அடித்துத் தாக்கினர்'

## சங்கானை வழக்கில் பெண் சாட்சியம்

குரும்பசிட்டி, சனி

"சம்பவதினம் எனதுவீட்டுக்கு சுமார் ஒரு மைல் தூரத்திலுள்ள தோட்டத்தில் 13 பரப்பில் பயிர்செய்யப் ட்டிருந்த மிளகாய்,கத்தரிப் பயிர்களை யாரோ சிலர் வெட்டி அழித்து நாசப்படுத்திவிட்டனர். இச் சேதம் பற்றி எனது கணவர் சங்கானைப் பொலிஸில் முறைப்பாடு செய்தார். அன்றைய தினம் மாலையில் நானும் கணவனும் வீட்டு வாசல் விறுந்தையில் பயிர்ச் சேதம் பற்றிப்பேசிக்கொண்டிருந்தோம். அப்பொழுது வீட்டுக்கு முன்னால் சற்றுத் தொலைவில் "வாருங் கோடா" என்று பலர் கத்தும் சத்தம் எனக்குக் கேட்டது.'' 'அடித்துக் கொல்லுவோம்'என பலத்த சத்தம் போட்டுக் கொண்டுஐம்பது அறுபது ஆட்கள் எமது வீடு நோக்கி ஓடி வருவதை நான் கண்டேன்."

சங்கானை கலவர வழக்கொன்றில் மல்லாகம் நீதிபதி திரு. ரி. எஸ். நெத்தசிங்கா முன்னிலையில் சாட்சியமளிக்கையில் சங்கானைகிழக்கைச் சேர்ந்தசெல்லமுத்து லட்சுமி[வயது 40]என்பவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

திருமதி லட்சுமி மேலும் கூறியதாவது:- வீட்டு வளவுக்குள் நுழைந்த எதிரிகள் சுவரிலிருந்த படங்களின் கண்ணுடிகளை உடைத்தும் தளபாடங்களை நொறுக்கியும் சேதப்படுத்தினர். வீட்டின் கூரைக்கு கற்கள் எறிந்தும் ஒடுகளைசேதமாக்கினர். 1-ம் எதிரியான சின்னத்தம்பி படுக்கை அறையிலிருந்த றேடியோவைத் தூக்கி நிலத்தில் வீசி உடைத்து எறிந்தார். இந் நேரத்தில் "ஐயோ" எனக் கூக்குரல் எழுப்பிக்கொண்டு நான் இருக்கையில் கணவன் வீட்டின் பின் புறத்திற்கு ஓடினுர். சின்னத்தம்பி, கந்தசாமி, இராஜதுரை, தருமன் ஆகிய நால்வரும் என்னைப் படலைக்கு அருகில் நிலத்தில் முகம் குப்புற வீழ்த்தி எழும்பாதவாறு அமர்த்திக் கொண்டனர். இந்நேரத்தில் கழுத்திலிருந்த தாலிக் கொடியை 1-ம் எதிரி அறுத்து எடுத்தார். பின்னர் என்னைத் தூக்கிக் கொண்டு சென்று அண்மையிலுள்ள பனைவடலிக் கூடலின் ஊடாக இழுத்துச் சென்று என்னை அடித்தித்தாக்கினர். இதன் பின்பு எதிரிகள் ஓடிவிட்டனர். நான் சத்தம் போட்டதையடுத்து கணவன் அவ்விடம் ஓடிவந்தார். அப்போது கணவன் தனது கையில் துவக்கு ஒன்றினை வைத்திருந்தார். பனைக்கூடலில் விழுந்து கிடந்த சமயம் துப்பாக்கி வெடிச் சத்தம் எனக்குக் கேட்டது. கணவரினுல் நான் வீட்டுக்குக் கொண்டு செல்லப்பட்டேன். பொலிஸ் நிலையம் சென்று நான் வாக்கு மூலம் கொடுத்தேன். எனக்கு முகத்திலும் பின்புறத்திலும் ஏற்பட்ட காயங்களுக்கு ஆஸ்பத்திரியில் தங்கியிருந்து சிகிச்சை பெற்றேன்.

இவ்வழக்கில் சின்னத்தம்பி, பொன்னன், பிள்ளையன், நடேசன், வயிரமுத்து, ஆசை, கே. பொன்னன், வைரவன், இராஜதுரை, நல்லப்பு, மகேஸ்வரி, கந்தசாமி, நாகலிங்கம், பரமு, துரைராசா, பழனி ஆகிய 16 பேருக்கு எதிராக, சங்கானைப் பொலிசார் சட்டவிரோதக் கூட்டம் கூடி, கலகம் விளைவித்தது, 1500 ரூபா பெறுமதியான தாலிக் கொடியை அபகரித்தது, செல்லமுத்து வீட்டுக்கு சேதம் விளைவித்து தளபாடங்கள் நாசப்படுத்தி நஷ்டம் ஏற்படுத்தியதாக குற்றஞ்சாட்டித் தொடரப்பட்டுள்ளது.

எதிரிகள் தரப்பில் திரு. சிவ. ஸ்ரீதரன் ஆஜராகியிருந்தார். மேல் விசாரணையை நீதிபதி இம்மாதம் 13-ந் திகதி வரை ஒத்திவைத்தார்.

## லொறி விபத்து வழக்கு

சாவகச்சேரி, சனி

'சம்பவதினமிரவு யாழ்ப்பாணத்திலிருந்து திருக்கோணமலைக்கு வெற்றுப் போத்தல்கள்ஏற்றியலொறியில் சென்றேம். எதிரி லொறியைச் செலுத்தினுர். இறந்த பாலச்சந்திரன் லொறியின் முன்சீட்டில் இடதுபக்கத்தில் இருந்தார். பளைக்கு அண்மையிலலொறி சென்றபோது 'சத்தம் கேட்கிறது கவனம்' என சாரதி கூறினுர். சிறிது நேரத்தில் லொறி புரண்டது. இலந்த பாலச்சந்திரன் மரத்துக்குக் கீழ் நசுங்கிக்கொண்டு கிடந்தார்.

பளை-முகமாலை லொறி விபத்து வழக்கு சாவகச்சேரி மாஜிஸ்திரேட் திரு. கே.விக்னராசா முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டபோதுசாட்சியமளித்த எம்.துரைராசா [வயது 20] மேற்கண்டவாறு கூறினுர்.

இவ்வழக்கில் இவ்வருடம் செப்டம்பர் 14ந் திகதி நடராசா தர்மராசா என்பவர் லொறியைக் கவலையீனமாகச் செலுத்தி பாலச்சந்திரன் என்ற வாலிபருக்கு மரணம் விளைவித்ததாக பளைப் பொலிஸாரால் இவ்வழக்கில் குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது. மேல்விசாரணை 13-ந் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டது.

## கூப்பன் யாருடையது?

யாழ்ப்பாணம், ஞாயிறு

யாழ்ப்பாணம் நல்லூர் வீதியில் ஒரு கூப்பன் கண்டெடுக்கப்பட்டு 'ஈழநாடு' காரியாலயத்தில் திரு. என். இராமலிங்கம் ரெஜினேல்ட் என்பவரால் ஒப்படைக்கப்பட்டுள்ளது. உரியவர் கூப்பனைபெற்றுக்கொள்ளலாம்.

## விளம்பரம்

### கேள்வி விளம்பரம்

**1. தோப்புப் பிள்ளையார் கோயில் றேட். திருத்தம்**

மேற் குறிப்பிட்ட வேலைக்குச் சீல் வைத்த கேள்விப்பத்திரங்கள் அச்சுவேலி கிராமசபைத் தலைவரால் 11-11-67-ம் திகதி சனிக்கிழமை காலை 9-30 மணி வரையும் ஏற்றுக் கொள்ளப்படும்.

ஒவ்வொரு கேள்விக் காரரும் தனித்தனி ரூபா 25/-ம், பத்திரப்பணம் ரூபா 5/-ம் கட்டியதன் பேரில் 10-11-67-ம் திகதி நண்பகல் 12-00 மணி வரையும் கேள்விப்பத்திரங்கள் வழங்கப்படும்.

ஏனைய விபரங்களைக் கிராமசபை அலுவலகத்தில் அறிந்துகொள்ளலாம்.

சி. த. சபாரத்தினம்,
ஜே. பி., தலைவர்,
கிராமசபை, அச்சுவேலி.

கிராமசபை அலுவலகம்,
அச்சுவேலி,
31-10-67. 312

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இரு கொரியாக்களையும் இணைக்க
## ஐ. நா.வில் ஆசிய, ஆபிரிக்க குழு முயற்சி
### ரஷ்யா ஆதரவு அளிக்கிறது

நியூயோர்க், நவ. 4
வட கொரியா, தென் கொரியா ஆகிய இரண்டையும் ஒன்ருக இணைப்பதற்கென ஒரு சர்வதேச மாநாடு அழைக்கப்பட வேண்டுமெனக் கம்போடியாவும், மற்றும், ஆறு ஆசிய, ஆபிரிக்க நாடுகளும் ஐ. நா. பொதுச்சபையில் சமர்ப்பித்திருக்கும் தீர்மானத்துக்கு சோவியத் ரஷ்யா ஆதரவு தெரிவித்துள்ளது.

இத் தீர்மானத்துக்கு ஆதரவு தெரிவித்துப் பேசுகையில், தென் கொரியாவிலுள்ள அமெரிக்கத் துருப்புகள் வெளியேற வேண்டுமென்றும் ரஷ்யப் பிரதிநிதி திரு. பெடரன்கோவ் கேட்டுக் கொண்டார்.

கொரியாவை இணைப்பதற்கென நிறுவப்பட்ட ஐ. நா. கமிஷன், கடந்த 20 வருடங்களாக அந்த முயற்சியில் தோல்வியுற்றுவிட்டதாகவும், ஆகவே, கமிஷனை நீக்கிவிட வேண்டுமென்றும் சர்வதேச மாநாட்டுக்கான தீர்மானத்தைச் சமர்ப்பித்துள்ள ஆசிய, ஆபிரிக்க நாடுகள் ஆலோசனை தெரிவித்துள்ளன.



# மே. வங்காள உணவு மந்திரி ராஜினமா

கல்கத்தா, நவ. 4
மேற்கு வங்காள உணவு மந்திரி திரு. பி. ஸி. கோஷ், மந்திரிசபையிலிருந்து தமது ராஜினமாவைச் சமர்ப்பித்துள்ளார். ராஜினமாக் கடிதத்தை அவர் டார்ஜீலிங்கிலுள்ள கவர்னரிடம் நரே அனுப்பி வைத்துள்ளார்.

மேற்கு வங்காள ஆளும் கட்சியான ஐக்கிய முன்னணியிலிருந்து தமது ஆதரவை விலக்கிக்கொள்ள திரு. கோஷுடன் மற்றும் 17 பேர் முடிவு செய்துள்ளதாகக் கூறப்படுகிறது.

உணவு மந்திரியின் ராஜினமா பற்றி நிருபர்கள் மேற்கு வங்காள முதல் மந்திரி திரு. அஜொய் முக்கர்ஜியிடம் கேட்டபோது, திரு. கோஷின் ராஜினமாக் கடிதம் தமக்கு இதுவரை கிடைக்கவில்லை என்று கூறினர்.

மேற்கு வங்காள மந்திரிசபையின் விசேஷ கூட்டமொன்று இன்று நடைபெறவிருக்கிறது. இக் கூட்டத்தில், இப்போது ராஜ்ய அரசாங்கத்தில் ஏற்பட்டுள்ள புதிய நிலைமை ஆராயப்படும்.

## ரேடியோவு நேருஜியும்!

பம்பாய், நவ. 4
ரேடியோ விளம்பரங்கள் சில சமயங்களில் எவ்வளவு எரிச்சல் ஊட்டக்கூடும் என்பதற்கு, பம்பாய் கவர்னர் டாக்டர் பி. வி. செரியன். அண்மையில் ஓர் உதாரணம் கூறினர்.

ஒரு சமயம் நேருஜி நியூயோர்க் போயிருந்த போது, வேலைக் கடுமையினல் மிகவும் அலுத்துப் போயிருந்தார். அறைக்குச் சென்றதும் 'அப்படா' என்று நாற்காலியில் சாய்ந்தார். அவரது சகோதரி திருமதி விஜயலக்ஷ்மி பண்டிட்டும் கூடஇருந்தார்.

'ரேடியோவைக் கொஞ்சம் திருப்பேன் கொஞ்சநேரம் ஏதாவது பாட்டுக் கேட்கலாம்' என்று சோதரியிடம் சொன்னர்.
திருமதி விஜயலக்ஷ்மி, ரேடியோவைத் திருப்பினர்.

'25 டொலர் கொடுத்தால் போதும். சவ அடக்கம் சம்பந்தமான எல்லாவற்றையும் நாங்கள் கவனித்துக் கொள்கிறோம்' என்ற ஒரு விளம்பர அறிவிப்பு வந்தது.

## விண்வெளிக் குண்டை ரஷ்யா தயாரிக்கிறது
### ரஸ்க் கூறுகிறர்

வாஷிங்டன், நவ. 4
சக்திவாய்ந்த விண்வெளிக் குண்டு ஒன்றைத் தயாரிப்பதில் ரஷ்யா ஈடுபட்டுவருவதாக நம்ப இடமுண்டு என அமெரிக்க பாதுகாப்பு மந்திரி திரு. டீன் ரஸ்க், நேற்று இங்கு, பத்திரிகை மகாநாடொன்றில் பேசுகையில் குறிப்பிட்டார்.

ஆனல், அது அவ்வளவு தூரம் பயன்தரக் கூடியதல்லவென்றும், விண்வெளியில் அதை இலகுவில் கண்டுகொள்ளமுடியுமென்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

## பி. பி. ஸி.யின் இசைப்போட்டி

லண்டன், நவ. 4
சாம்ராஜ்யத்திலுள்ள எவரும், வயது பேதமின்றி பங்குபற்றக்கூடிய பியானே வாத்திய இசைப்போட்டி ஒன்றை பிரிட்டிஷ் ஒலி பரப்புக் கூட்டுத் தாபனம், அடுத்த வருடம் நடத்த இருக்கிறது.

இப்போட்டியில் வெற்றி பெறுபவருக்கு 500 பவுண்களும், லண்டன் சங்கீத ஸெஸன்களிலும், பி. பி. ஸி. வெல்ஷ் வாத்தியக் கோஷ்டியிலும் பங்கு பற்றும் சந்தர்ப்பங்களும் அளிக்கப்படும். இரண்டாம், மூன்றும் இடத்தைப் பெறுபவர்களுக்கு முறையே 300,200 பவுண்களும் கொடுக்கப்படவிருக்கின்றன.

இதற்கான விண்ணப்பங்கள் பூர்த்தி செய்யப்பட்டு அடுத்த வருடம் ஜனவரி 19-ந் திகதிக்கு முன் பி. பி. ஸி. மொஸாட் பியானே கொன்ஸேட்டோ போட்டி, லண்டன் என்ற விலாசத்துக்கு அனுப்பப்படவேண்டும்.

## தாய்லாந்தி[illegible] தீ விபத்து
### 1,000 வீடுகளுக்கு[illegible] மேல் நாசம்

பாங்கொக், நவ. 4
தாய்லாந்தில், கோரட் என்ற இடத்தில் ஏற்பட்ட ஒரு பெரிய தீ விபத்தில், ஆயிரத்துக்கும் அதிகமான கட்டிடங்கள் நாசமடைந்தன.

கோரட்டில் அமெரிக்க விமானப் படைத்தளமும் இருக்கிறது. அப்படையைச் சேர்ந்த ஹெலிகொப்டர்கள் ரசாயன மருந்துக்களைத் தூவித் தீயை அணைக்க உதவி புரிந்தன.

பத்துலட்சம் டொலருக்கு மேல் சேதம் இருக்குமென மதிப்பிடப்பட்டுள்ளது. பல ஆயிரக்கணக்கான மக்கள் வீடிழந்துள்ளனர்.

## மைசூர் முதல்வர் நிஜலிங்கப்பா காங்கிரஸ் தலைவர் ஆகலாம்?

பங்களூர், நவ. 4
இந்திய காங்கிரஸ் தலைவர் பதவிக்கு திரு. நிஜலிங்கப்பா தான் யாவராலும் ஏற்கப்படக் கூடியவர் என்று கட்சியின் பெருந்தலைவர்கள் கருதுவதாக மைசூர் காங்கிரஸ் தலைவர் டாக்டர் கே. நாகப்ப ஆல்வா இங்கு தெரிவித்துள்ளார்.

திரு. நாகப்ப ஆல்வா, விசேஷ அழைப்பின் பேரில் அண்மையில் ஜபல் பூரில் நடைபெற்ற காங்கிரஸ் காரியக் கமிட்டிக் கூட்டங்களில் கலந்து விட்டு மைசூர் திரும்பியுள்ளார்.

திரு. நிஜலிங்கப்பா பற்றிக் குறிப்பிட்ட திரு. ஆல்வா மைசூர் தனது தலைசிறந்த தலைவரை இழக்கத் தயாராக இருக்குமா என்பதைப் பொறுத்திருந்து தான் பார்க்க வேண்டும் என்றும் கூறினர்.

திரு. நிஜலிங்கப்பா, மைசூர் முதல் மந்திரியாவார்.

## சுவாஸிலாந்துக்கு சுதந்திரம்

லண்டன். நவ. 4
சுவாஸிலாந்து அடுத்த வருடம் செப்டம்பர்மாதம் சுதந்திரநாடாகப் பிரகடனப்படுத்தப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

## கெயிஸிங்கருக்கு வில்சன் கடிதம்

பொன், நவ. 4
ஐரோப்பிய பொதுச் சந்தையில் இடம் கிடைக்காவிட்டால். தனது ஐரோப்பிய கொள்கையில் பிரிட்டன் பல மாற்றங்களைச் செய்ய உத்தேசித்துள்ளது என்ற செய்தியை மறுத்து, பிரிட்டிஷ் பிரதமர் திரு. வில்சன் தமக்கு ஒரு கடிதம் எழுதியுள்ளதாக மேற்கு ஜெர்மன் பிரதமர் திரு. கெயிஸிங்கர் இங்கு பத்திரிகை மகாநாட்டில் பேசுகையில் தெரிவித்தார்.

## பிரிட்டனில் புதிய இந்திய தூதுவர்

புதுடில்லி, நவ. 4
அலஹபாத் உயர் நீதிமன்ற முன்னுள் நீதிபதி எஸ். எஸ். தவன். பிரிட்டனில் இந்தியாவின் புதிய ஹைகமிஷனராக நியமிக்கப்பட்டுள்ளார்.

எட்டு மாதங்களுக்கு முன் டாக்டர் ஜி. மேத்தா தூதர் பதவியிலிருந்து ராஜினமாச் செய்தார். அப்போதிருந்து இப்பதவி காலியாகவே இருந்தது.

## ஸ்டேஷன் வாகன் குடைசாய்ந்து
### பள்ளி முதல்வர் பலி

பங்களூர், நவ. 4
பங்களூரிலிருந்து கோலாருக்குச் சென்றுகொண்டிருந்த ஒரு ஸ்டேஷன் வாகன் பெரு மழையில் சறுக்கிக் குடைசாய்ந்த காரணமாக, அதில் பிரயாணம்செய்து கொண்டிருந்த உயர் நிலைப் பள்ளி முதல்வர் டாக்டர் எச். பிரசாத் உயிரிழந்தார். அவருடன் பிரயாணம் செய்த 3 பெண்கள் காயமடைந்தனர்.

பங்களூரிலிருந்து 18 மைல் தூரத்தில் இந்த விபத்து ஏற்பட்டது.

## "கதைத்துக் கொண்டிருந்தபோது எதிரிகள் அடித்தனர்"

சாவகச்சேரி, சனி
"சம்பவ தினம் இரவு 9-30 மணிக்கு எனது சிறிய தாயாருடைய வீட்டிற்குச் சென்ற போது சரஸ்வதி என்னைக் கூப்பிட்டார். நான் இங்கு சென்று வாங்கு ஒன்றில் இருந்தேன். சரஸ்வதி நின்றுர். எப்படிச் சுகம் எனக்கேட்டு நான்கதையை ஆரம்பித்தேன். நாமிருவரும் கதைத்துக் கொண்டிருந்த போது எதிரிகள் அங்கு வந்து எனக்கு அடித்தனர்"

நுணுவில் தாக்குதல் வழக்கு சாவகச்சேரிமாஜிஸ்திரேட் திரு. கே. விக்னராசா முன்னிலையில் விசாரணைக் கெடுக்கப்பட்ட போதுசாட்சியமளித்த கே. விநாயகமூர்த்தி என்ற வாலிபர் மேற்கண்டவாறு கூறினர்.

இவ்வழக்கில் இவ்வருடம் ஜூன் 3-திகதி நுணுவில்என்னுமிடத்தில் வசிக்கும் பசுபதி பெண் சரஸ்வதி வீட்டில் வைத்து கதிரித்தம்பி விநாயகமூர்த்திஎன்ற வாலிபரைத் தாக்கிப் படுகாயப்படுத்தியதாக வி. மார்க்கண்டு, என். நவரத்தினம் ஆகிய இருவர் மீதும் சாவகச்சேரிப் பொலிசாரால் குற்றம் சாட்டப்பட்டிருந்தது. விசாரணை அடுத்த மாதம் 14-ம் திகதிக்கு ஒத்தி வைக்கப்பட்டது.

## துப்பாக்கி சூட்டில் ஒருவர் பலி

லக்னே, நவ. 4
கடந்தசெவ்வாய்க்கிழமை மாலையில் ஒரு கோஷ்டிக்கும் பொலிசாருக்குமிடையே துப்பாக்கிச் சண்டை நடைபெற்றதில், ஒரு நபர் உயிரிழந்தார். 3 பொலிஸ்காரர்கள் உட்பட 16 பேருக்குக் காயம் ஏற்பட்டது. இச்சம்பவம் சம்பந்தமாக 14 பேர் கைதாகியுள்ளனர்.

கள்ளக்கடத்தல்

## கோஷ்டி மீது பொலிசார் சுட்டனர்

கல்கத்தா. நவ. 4
பெல்காரிய ரயில் நிலையத்தில் கட்டாரிகள். கற்கள். மற்றும் பல ஆயுதங்களுடன் தாக்குதல் நடத்திய அரிசி கடத்தல் கோஷ்டி ஒன்றின் மீது, பொலிசார் கண்ணீர்ப் புகை பிரயோகித்தனர். பின்னர், கும்பலை நோக்கி அவர்கள் சுட்டனர். கல்கத்தாவிலிருந்து 7 மைல் தூரத்தில் உள்ளது பெல்காரியா.

அரிசி கடத்தல்காரர் கோஷ்டி பொலிசாரைத் தாக்கியதன் விளைவாக. 6 பொலீஸ்காரர் காயமடைந்தனர்.

## கொங்கோ நிலைமை

கின்ஷாஷா. நவ. 4
கட்டாங்காவில் இறங்கியுள்ள ஐரோப்பிய கூலிப் பட்டாளங்களை அங்கிருந்து அடித்து விரட்டவெனக் கொங்கோ தனது துருப்புக்களை அங்கு அனுப்பி வைத்துள்ளது.

கொங்கோவினுள் போர்த்துக்கேய அங்கோலாவில் இருந்து வந்து நுழைந்த கூலிப் பட்டாளங்கள் பற்றிக் கொங்கோ ஐ. நா. பந்தோபஸ்து சபைக்குப் புகார் செய்துள்ளது.

ஆனல், கொங்கோவுக்குச் சென்றுள்ள துருப்புக்கள் அங்கோலாவி[illegible] செல்லவில்லை எனப் போர்ச்சுக்கல் மறுத்துள்ளது.

## அமெரிக்க காங்கிரஸ அங்கத்தவர் மீது சூடு

நியூ ஓர்லீன்ஸ், நவ. 4
அமெரிக்கக் காங்கிரஸ் அங்கத்தவர் திரு. ஜோன் ராறிக் என்பவரை நோக்கி மூன்று பேர் ஐந்து அல்லது ஆறு தடவை சுட்டனர். ஆனல், சூடு தவறிவிட்டது. திரு. ராறிக் காயமின்றித் தப்பினர்.

திரு. ராறிக், இன வேற்றுமையை ஆதரிப்பவர். [illegible] சார் சந்தேகிக்கின்றனர்.

இந்தியாவில்

## பட்டதாரியாணவருக்கு கட்டாய பயிற்சி

புதுடில்லி, நவ. 4.
இந்தியாவிலுள்ள பல்கலைக்கழகங்களில் பயிலும் 12 லட்சம் பல்கலைக் கழக மாணவர்களும் இனிமேல் இரண்டு வருடகட்டாய தேசிய சேவை பயிற்சி பெறவேண்டும். இதற்கான ஒரு திட்டத்தை இந்திய அரசாங்கம் தயாரித்திருக்கின்றது.

## அஞ்சலி

புன்னலைக்கட்டுவன், சனி
கடந்த 11 ஆண்டுகளாக அகில இலங்கைத் தராதரப்பத்திர தமிழாசிரியர் சங்கத் தலைவராயிருந்து அண்மையில் காலமாகிய திரு. இ. சோமசுந்தரத்துக்கு மேற்படி சங்க நிர்வாகசபை நேற்று முன்தினம் அச்சுவேலி ஸ்தான பாடசாலை மண்டபத்தில் கூடி அஞ்சலி செலுத்தியது.

திரு. சி. சிவசம்புவின் தலைமையில் நடைபெற்ற இக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட அனு[illegible]ாபக் தீர்மானம் ஒன்று இறந்தவரின் [illegible]டும்பத்துக்கு அனுப்பப்பட்டது.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

**மணிவாக்கு**

எண்ணங்கள் தாமாகத் தோன்றி இஷ்டப்படி ஓடுதல் மன இயல்புகளில் ஒன்று. எனவே எண்ணங்களை அடக்குதல் மனத்தை அடக்குவதாகும். மனத்தை அடக்குதலோ காற்றை அடக்குதலிலும் கடினமானது. எனவே உள்ளத்திலுள் இறைவன் இருப்பதால் அம்மனத்தை அடக்குதலும் சாத்தியமாகின்றது.

—மகாத்மா காந்தி

ஈழநாடு

Eelanadu National Tamil Daily
Telegram: EELANADU Jaffna
Post Box: 49 Jaffna
Telephone: 389.

யாழ்ப்பாணம் பிலவங்கஞு
ஐப்பசிீ 19உ (5-11-67)

## அமைச்சரின் அறிவிப்பு

யாழ்ப்பாண மாநகர சபைக்குப் புதிய தேர்தல் விரைவில் நடைபெறுமென்றும் வட்டாரங்கள் சமமாகப் பிரிக்கப்படுமென்றும் உள்ளூராட்சி அமைச்சர் திரு. எம். திருச்செல்வம் நேற்று யாழ்ப்பாணத்தில் தெரிவித்திருந்தார். விசேஷ ஆணையாளர்களின் நிர்வாகத்தின் கீழ் யாழ்ப்பாண நகரம் சில துறைகளில் முன்னேற்றம் அடைந்துள்ள போதிலும் அமைச்சர் கூறியது போல மக்களால் தெரிவு செய்யப்பட்ட பிரதிநிதிகளின் நிர்வாகத்துக்கு ஈடாக மாட்டாதென்பது உண்மையே. கடந்தகால அனுபவங்களைக் கருத்தில் கொண்டு அடுத்த தேர்தலில் நேர்மையும், திறமையும், தகுதியும் உடைய அபேட்சகர்களை யாழ்ப்பாண நகர வாக்காள மக்கள் தெரிவு செய்து அனுப்பவேண்டும். தெரிவு செய்யப்படும் அங்கத்தவர்களும் நகரத்தினதும் நகர மக்களினதும் நலனைக் கருத்தில் கொண்டு தங்கள் சொந்த விருப்பு வெறுப்புக்களுக்கு இடமளிக்காமல் பணி புரியவேண்டியது அவசியமாகும்.

இப்போதுள்ள வட்டார அமைப்புச் சரியல்ல என்பதை யாரும் எதிர்க்கவில்லை. வட்டாரத்துக்கு வட்டாரம் வாக்காளர் எண்ணிக்கையில் வேறுபாடு அதிகம் உண்டு. இந்த வேறுபாடுகளை நீக்கவும் எல்லோருக்கும் பிரதிநிதித்துவம் கிடைக்கவுமே மார்ட்டின் கமிஷன் நியமிக்கப்பட்டது. கமிஷனின் சிபார்சுகளுக்கு ஆதரவும் எதிர்ப்பும் உள்ளது. ஆயினும் வட்டாரங்கள் சமமாகப்பிரிக்கப்படுமென்றும் அதன் பின்னர் விரைவில் தேர்தல் நடைபெறுமென்றும் அமைச்சர் கூறியிருப்பது நகரப்பொது மக்களுக்கு ஆறுதலும் நம்பிக்கையும் அளிப்பதாகும். விரைவில் இதற்கான ஒழுங்குகள் மேற்கொள்ளப் படுமென எதிர்பார்ப்போம்.

# உலக மக்களின் உற...

# புத்தகங்களே அத்தியாவ...

## அமெரிக்க--யாழ்ப்பாண உறவுக்கும் இதுவே காரணம்

### யாழ். நூலகத்தில் அமெரிக்க ஸ்தானிகர்

[யாழ்ப்பாணம் பொதுஜன நூல்நிலையத்தின்மேல் மாடியில் அமைக்கப்பட்டஅமெரிக்க கலாச்சாரநூல் நிலையத்தை இலங்கையிலுள்ள அமெரிகக ஸ்தானிகர் திரு. அன்ட்றூவி கொறி நேற்று முன்தினம் மாலை திறந்துவைத்துப்பேசியதன் சுருக்கம் இங்கு தரப்படுகின்றது. தொகுப்பு: எஸ். திருச்செல்வம்]

இலங்கைக்கும் அமெரிக்காவுக்குமிடையேயான நெருங்கிய உறவுகள், 1816-ம் ஆண்டில் முதலாவது அமெரிக்கமிஷனரி ஒருவர்இங்கு வந்து சேர்ந்ததிலிருந்தே ஆரம்பமானது என்பது சகலரும் அறிந்ததே. கடந்த 150 வருடகாலமாக அவரைப் பின்தொடர்ந்து பல்வேறு துறைகளில் உள்ள அமெரிக்கர்கள் இங்கு வந்துள்ளனர். அவர்களிற் பலர் இங்கேயே நிலைகொண்டு இந்நாட்டுமக்களின் கல்வி முன்னேற்றத்துக்காகத் தம்மை அர்ப்பணித்துள்ளனர். இன்றுகாலை இப் பகுதியிலேயே பழம்பெரும்கல்வி நிலையங்களில் ஒன்றுனதும் எனது நாட்டவரிஞல் 19-ம் நூற்ருண்டின் பிற்பகுதியில் ஸ்தாபிக்கப்பட்டதுமான யாழ்ப்பாணக் கல்லூரிக்கு விஜயம் செய்யும் பாக்கியம் எனக்குக் கிடைத்தது.

இலங்கையிலேயே முதலாவது உயர் கல்வி நிலையம், முதலாவது மருத்துவக்கல்லூரி, முதலாவது அச்சுக்கூடம், முதலாவது புதினப் பத்திரிகை ஆகியன வட இலங்கையிலுள்ள அமெரிக்கர்களைச் சார்ந்ததே என்பதை அறிவதில் நான் மிகவும் பெருமைப்படுகிறேன்.

### இலங்கை — அமெரிக்க நட்புறவு

இலங்கையில் கால்நூற்ருண்டு காலமாக தங்கியிருந்து, இத்தீவிலேயே முதலாவது மருத்துவக் கல்லூரியை நிறுவியபின், பலமேல்நாட்டு வைத்திய நூல்களை மொழிபெயர்த்ததும், அரிய சேவையாற்றில் அமெரிக்க மருத்துவ தொண்டரான டாக்டர் சாமுவல் கிறீனின் பணியைக் கேள்விப்படுவதில் நான் விசேஷ பெருமையடைகின்றேன். இவரது பணி இலங்கைக்கும் அமெரிக்காவுககுமிடையேநிலவும் ஆக்கபூர்வமான நட்புறவுக்கு ஒரு சிறந்த உதாரணமாகும்.

தனிப்பட்ட முறையில் நடந்துவந்த இந்தக் கலாச்சாரப் பரிமாறலும் ஒத்துழைப்பும், இன்றைய சகாப்தத்தில் பல தனியார் அமெரிக்க ஏஜென்ஸிகளால்குறிப்பாக இலங்கையில் நூல்நிலைய அபிவிருத்தியில் உறுதியான அக்கறை காட்டிவரும் ஆசிய நிறுவனத்திஞல் தொடரப்பட்டு வருகின்றது. இதற்கு உதாரணமாக இந்நூல்நிலையக் கட்டிடத்துக்காக ஆசிய நிறுவனம் 1954ம் ஆண்டில்கொடுத்துதவிய கணிசமான நன்கொடையையும், பின்னர் குழந்தைகள் நூல்நிலையத்துக்காக 1966-ம் ஆண்டில் அளித்தபிறிதொரு தொகையையும் சுட்டிக்காட்டலாம்.

### சமாதானப்படை தொண்டர்கள்

எமது அக்கறை புத்தகங்களுக்கும் நூல்நிலையங்களுக்கும் அப்பால் செல்லுகிறதென்பதை இக்கட்டத்தில் குறிப்பிட விரும்புகின்றேன். உங்களுடன் சேர்ந்து ... சாய, சமூக அபிவிருத்தித் திட்டங்களில் வேலை செய்ய ஏழு சமாதானப்படைத் தொண்டர்கள் விரைவில் யாழ்ப்பாணம் வருவர்கள். இப்போதும் இக் குடாநாட்டிலுள்ள கமக்காரர்களுடன் சேர்ந்து சிறந்த முறையில் கடமையாற்றும் நோக்கத்துடன் அமெரிக்காவிலிருந்து கொண்டே இத்தொண்டர்கள் உங்களது மொழியைப் படித்து வருகிருர்கள்.

இருந்தாலும் அமெரிக்கர்களாகிய நாங்கள் ஏன் இவ்வளவு தூரம் நூல்களிலும். நூல்நிலையங்களிலும், அக்கறை கொண்டுள்ளோம் என நீங்கள் ஆச்சரியப்படலாம். இவ்வருட முற்பகுதியில் சர்வதேசநூல், நூல்நிலையநடவடிக்கைகள் பற்றிய தேசியக் கொள்கையொன்றை வெளியிடுகையில், 'ஒவ்வொரு நாட்டினுடைய நம்பிக்கையினதும். குறிக்கோள்களினதும் அடிப்படையில் கல்வியே இருக்கின்றது. அதுவே சர்வதேசத் தொடர்புகளின் அடிப்படையிலும் இருக்கவேண்டும்' என்று ஜனதிபதி ஜோன்ஸன் கூறியுள்ளது, இத்தகைய நிலையங்களில் எமககுள்ள நம்பிக்கையை பிரத்தியட்சமாக வெளிப்படுத்தியுள்ளது எனலாம்.


### உலக மக்கள் தொடர்பும் அறிவும்

புத்தகங்கள்என்ருல்அவற்றின் அர்த்தப்படி, உலக மக்களிடையே தொடர்புக்கும், உறவுக்கும் அத்தியாவசியமானவையாகும் என்பதே. தமது அபிலாஷைகள் கலாச்சார சாதனைகள் மற்றும் விஞ்ஞான, தொழில் நுட்ப அறிவு ஆகியவற்றை எழுத்து மூலமே மக்கள் அதிக சக்தியுடன் வெளிப்படுத்துகின்றனர். தார்மீக அபிவிருத்திக்கு சேவையாற்றுவதைவிட, புத்தகங்களின் உபயோகம் அதற்கும் அப்பால் செல்கின்றது. ஏனெனில் மனித ஆத்மாவின் வளர்ச்சியிலும் அவை முக்கிய பங்கு ஆற்றுவனவாகும். இதை உணர்ந்தே புத்தகங்கள், அறிவு ஆகியவற்றின் தடையற்றபரிமாறலைஉற்சாகப்படுத்தி ஊக்குவிப்பதைஅமெரிக்க அரசாங்கம் தனது முக்கியமானதொரு கொள்கையாகக் கடைப்பிடித்து வருகின்றது.

சில காலத்துக்கு முன்னர் இப்போது நூல்நிலையங்களிலுள்ள புத்தகங்களை வகுப்பதில் சர்வதேச ரீதியாகப் பயன்படுத்தப்படும் 'டியூவி' தச விகிதாசார வகுத்தல் திட்டத்தை உருவாக்கிய மெல்வில் டியூவி என்ற அமெரிக்க அறிஞர் 'நூல் நிலையங்கள் நீர் ஊற்றுக்கள், நீர் சேகரிப்பு நிலையங்களல்ல' என்று கூறியிருந்தார். இது எவ்வளவு தூரம் உண்மையென்பதை நாம் எல்லோரும் அறிவோம். நூல்நிலையங்கள், வெளிச் செல்லும் அறிவூற்றுக்களாக இருக்கவேண்டுமேயன்றி, வெறும் சேகரிப்பு நிலையங்களாக இருக்கக்கூடாது. ஆனலும் ஊற்றுக்கள் ஊற்றெடுப்பதாஞல் அவை திருப்பிவிடப்படவேண்டும். இன்று நான் பெருமையுடன் பரிசளிக்கும் இந்த நூல் தொகுப்பு அதிக அளவில் பயன்படுத்தப்பட்டால்தான் அது ஓர் உண்மையான பொக்கிஷமாக விளங்கமுடியும்.

இந்த அமெரிக்கத் தொகுப்புப் பல வருடங்களாகத் தயாரிக்கப்பட்டுவந்துள்ளது. அது இப்போது உங்களுடைய சக பிரஜைகளின் நிர்வாகப் பொறுப்பில் விடப்பட்டுள்ளது அமெரிக்காவில் நீண்டகாலம் தங்கியிருந்து, 'அத்லாந்தா' பல்கலைக்கழகத்திலும் ''சாண்டியாகோ' பொது நூல் நிலையத்திலும் நூல்நிலைய கல்விபயின்ற யாழ்-நூல் நிலைய பிரதான பொறுப்பாளரான திரு. பாக்... தனுக்கு அமெரிக்க... கங்கள் நூல் நிலைய... களுடன் அதிகப... முண்டு என்பதை ... விசேஷமாகக் குறி... விரும்புகிறேன். அ... வில் நன்கொடைக்... பயின்ற மற்றும் ப... கைவர்களைப் போல்... ரும் எனது நாட்டி... தவற்றை நடைமு... செய்து காட்டுவார்... சாரப் பரிமாறல், ஒ... ப்பு இது இன்னுமே... ந்த உதாரணமாகு... விக் களஞ்சியமாக ... கும் இந்நூல் நிலைய... முன்னைய நன்கொ... ப்...ளர்களையு... அதன் ஆதரவ... மேலும் பல கல்வி, ... சாதனைகளைஆற்ற உ... பதுடன் நீண்ட ... இலங்கைக்கும் அ... வுக்குமிடையே ... வரும் பரஸ்பர ... நல்லெண்ணப் பிணை... பாதுகாத்து வளர்... நம்புகிறேன்.

இந்த அமெரிக்க... தியை யாழ்ப்பாண... க்கு அன்பளிப்புச்... தில் நான் மட்டற்... சியடைகின்றேன்.



திரு. த.நீதிராசா செனட்டராக நியமிக்கப்பட்டதைப் பாராட்டி கொழும்பு புதுச்செட்டித்தெருவில் காரைநகரைச் சேர்ந்த வர்த்தகர் திரு.எஸ். எம். கனகரத்தினம் அளித்த விருந்துபசாரத்தில் வர்த்தகர்கள் மற்றும் பிரமுகர்களும் கலந்து கொண்டனர்.

## அரசாங்க...

கச்சதீவு... என்ற முடி... பார்லிமெ... தான் சொ... பதற்கு மு... மென்றும் ...

நெடுந்தீவில்... மைல்களுக் கப்... மேற்குப் பக்கம... யாருக்குரிய தெ... இலங்கை ... தின் தற்போ... பிரச்னைகளில் ... கச்சதீவு இ... வரு...ங்களாக ... மக்...வின் ... தான் இருந்த... தெனலாம். அமைந்துள்ள ... னியார் ... நெடுந்திவு மக்... பட்டுபரிபாலி... கிறது. அக்கோ... தவரின் வழித்... திரு. வ. அந்... தற்சமயம் ... னத்களத்தில் ... வருகிருர். அக்கோவிலி... அக்கோவிலி... பா...கவும்...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உறவுக்கு
# யாவசியம்

ளரான திரு. பாக்கியநாதனுக்கு அமெரிக்க புத்தகங்கள் நூல் நிலையமுறைகளுடன் அதிக பரிச்சயமுண்டு என்பதை இங்கு விசேஷமாகக் குறிப்பிட விரும்புகிறேன். அமெரிக்காவில் நன்கொடைக் கல்வி பயின்ற மற்றும் பல இலங்கையர்களைப் போல் இவரும் எனது நாட்டில் படித்தவற்றை நடைமுறையில் செய்து காட்டுவார். கலாச்சாரப் பரிமாறல், ஒத்துழைப்பு இது இன்னுமோர் சிறந்த உதாரணமாகும். கல்விக் களஞ்சியமாக விளங்கும் இந்நூல் நிலையம் இந்த முன்னைய நன்கொடைப்படிப்பாளர்களையும் மற்றும் அதன் ஆதரவாளர்களையும் மேலும் பல கல்வி, அறிவுச் சாதனைகளை ஆற்ற ஊக்குவிப்பதுடன் நீண்ட காலமாக இலங்கைக்கும் அமெரிக்காவுக்குமிடையே இருந்து வரும் பரஸ்பர நட்புறவு, நல்லெண்ணப் பிணைப்புகளை பாதுகாத்து வளர்க்குமென நம்புகிறேன்.

இந்த அமெரிக்கத் தொகுதியை யாழ்ப்பாண மக்களுக்கு அன்பளிப்புச் செய்வதில் நான் மட்டற்ற மகிழ்ச்சியடைகின்றேன்.

## தமிழ் மறைத் தேர்வில் பரிசு பெறுவோர்

யாழ்ப்பாணம், திங்கள்

இவ் வருடம் ஜூலை மாதத்தில் தமிழ் மறைக் கழகம் நடத்திய தமிழ் மறைத்தேர்வில் பரிசுபெறுவோர் பின் வருமாறு:- முதற்பரிசிலுக்குத் தங்கப் பதக்கமும் ஏனையவற்றிற்கு வெள்ளிப் பதக்கங்களும் தமிழ் மறைக் கழகத்தின் பதினாறாவது மாநாட்டில் வழங்கப்படும்.

மத்திய பிரிவு முதற் பரிசில் -கோ. திருப்பதி ஹட்டன், இரண்டாம் பரிசில் -க. ஜெயராணி, ஹட்டன். மூன்றும்பரிசில்-சி. தமயந்தி அக்கரைப்பற்று.

கீழ்ப்பிரிவு- முதலாம் பரிசில்-எஸ். மனோரஞ்சிதம், உடுவில், இரண்டாம் பரிசில்-அ. புராந்தகன், சுன்னாகம். மூன்றும் பரிசில்- க. மகேந்திரராணி, முரசுமோட்டை. நான்காம் பரிசில்-மு. கமலாம்பிகை.

தொடக்கப்பிரிவு- முதலாம் பரிசில்-வை. அருட்செல்வன், நாவலப்பிட்டி, இரண்டாம் பரிசில்- சி. கலையரசி, ஹட்டன். மூன்றும் பரிசில்-இரா. புஸ்பலீலா, ஹட்டன், நான்காம் பரிசில்-கா. விஜயகுமாரி தெல்லிப்பளை, வயது குறைந்தோர்க்குரிய பரிசில் -சி. கலையரசி, ஹட்டன்.

பெயர்களுக்குப் பின்னுள்ள இடங்கள் தேர்வுக்குத்தோற்றிய இடங்களாகும்.

## இன்றைய பலன்

ஞாயிற்றுக்கிழமை
[ஐப்பசி மாதம் 19உ]
[5-11-67]

நட்சத்திரம்: கேட்டை பி. ப. 3-16 மேல் மூலம்.
திதி: சதுர்த்தி பி. இரவு 3-41
சுபநேரம்: 9-04—10-34
ராகுகாலம்: 4-34—6-04.

மேஷம்: உள்ளக்கிளர்ச்சி உறவாடும் நிலை.
ரிஷியம்: உடல் நிலை மந்தம், உறவில் வெடிப்பு.
மிதுனம்: கன்னியர் உறவு, மின்னிடும் காதல்.
கடகம்: துன்பத்தின் நிழல், தொழிலில் தடை.
சிம்மம்: [illegible]ரம்பொருள் நினைவு, பரிசில் நாட்டம்.
கன்னி: அயராத உழைப்பு, அபிவிருத்தி.
துலாம்: பணவரவு, பந்துக்கள் உறவு.
விருச்சிம்: வண்ணமயில் பிடிக்க வான்கோழியாகும்.
தனுசு: மக்கள் பிடிவாதம் மனதில் பெரும் சோகம்.
மகரம்: வாக்கில் வெற்றி, வளமுமுண்டு.
கும்பம்: அன்னியர் உறவால் கண்ணியக் குறைவு.
மீனம்: தரமான வாழ்வு தனமும் சேரும்.

—சோதிடக் கலாநிதி—
திருமலை வேலுப்பிள்ளை

## ‘கணவனுக்கு பணிவதா? முடியவே முடியாது’

## நாட்டிலும் நகரிலும்

— ‘வழிப்போக்கன்’ —

பார்வதி பரமேஸ்வரர் சாட்சியாக!
சூரிய சந்திரர் சாட்சியாக!
அக்கினி சாட்சியாக!
சபையோர் சாட்சியாக!

நான் இந்தப் பெண்ணை ஏற்றுக்கொள்ளுகிறேன்.

இது நமது தமிழ் இளைஞர்கள் ஒருபெண்ணைத்தொட்டு தாலி கட்டும்போது அம்மி மிதித்து ஓம குண்டத்தின் முன்னே நின்று எடுத்துக் கொள்ளும் சத்தியப் பிரமாணம்.

தமிழ் மணப்பெண் இப்படி ஒரு சத்தியமும் செய்வதில்லை. திருமண வைபவம் முழுவதும் அவள் ஒரு கல்லுப் பிள்ளையார் போல மௌனம் அனுட்டிப்பாள். அவள் எந்தவிதமான சத்தியத்துக்கும் கட்டுப்படுவதில்லை. பண்டைக் காலம் தொட்டு பெண்ணின் சுதந்திரத்தை தமிழ் மக்கள் எப்படி பாதுகாத்து வந்தார்கள், பார்த்தீர்களா?

இப்படி ஒன்று சேர்க்கப்பட்ட தம்பதிகள் பிற்காலத்தில் மலரும் மணமும் போலவும் வாழலாம், இருளும் ஒளியும் போலவும் வாழலாம், சர்க்கரையும் பாலும் போலவும் வாழக்கூடும், புளித்த மோரும் சுடு கஞ்சியையும் போலவும் வாழக் கூடும்.

எப்படி வாழ்ந்தாலும் அந்த வாழ்க்கையின் வெற்றி தோல்விக்கு சத்திய பிரமாணம் செய்த அந்த ஆடவனே பரம பொறுப்பாளியாகிறான்.

மேனாடுகளில் திருமண வைபவத்தின்போது மணமகனும் மணமகளும் மதகுருவின் முன்னால் நின்று சத்தியம் செய்து கொள்ளவேண்டும். அப்படி ஒரு வழக்கம் அவ்விடங்களில் நிலவுகிறது.

அமெரிக்க ஜனாதிபதி ஜோன்சனின் மகளுக்கு சமீபத்தில் திருமணம் நடைபெறப்போகிறது. அவருடைய வருங்கால கணவர் ஒரு கடற்படை ‘கப்பித்தான்’!

அவரை தேவாலயத்தில் போதகரின் முன்னிலையில் கைபிடிக்கும்போது ‘அவருக்கு கீழ்ப்படிந்து நடப்பேன்’ என்று தாம் சத்தியம் செய்யப்போவதில்லை என்று செல்வி ஜோன்சன் தமது சிநேகிதிகளிடம் கூறியிருக்கிறாராம்.

அவர் இப்படி கூறியது இன்றைய சராசரி அமெரிக்க பெண்ணின் மனநிலையைக் காட்டுகிறதா, அல்லது தான் ஒரு ஜனாதிபதியின் புத்திரி என்ற மமதையைக் காட்டுகிறதா என்பது ஆராயப்படவேண்டியது.

எப்படியிருப்பினும் ஒரு பெரும், நாகரிகமான நாட்டின் தலைவரின் புதல்வி, ஏனைய பெண்களுக்கு எல்லாம் எடுத்துக்காட்டாக விளங்கவேண்டிய ஒரு குலமகள், இப்படி ‘எனது கணவருக்கு கீழ்ப்படிய மாட்டேன்’ என்று பகிரங்கமாக கூறவேண்டியதில்லை என்று எமக்கு படுகிறது. இரகசிய வாழ்க்கையில் வேண்டுமானால் அப்படி செய்து கொள்ளலாம், யாரும் ஆட்சேபிக்கப்போவதில்லை. திருமணம் ஆகுமுன்பே அதை பட்டப் பகலில் தம்பட்டம் அடித்துக் கொள்ளவேண்டுமா?

பெண்கள், அதுவும் அமெரிக்காவில், எத்தனையோ சுதந்திரங்களை அனுபவித்து வருகிறார்கள் என்பது உண்மை. பெண் சுதந்திரம் வேறு, ஆண்—பெண் தாம்பத்திய வாழ்க்கை வேறு என்பதை உணர்தல்வேண்டும். சுதந்திரத்தைவிட இன்பகரமாகிய இல்லற வாழ்க்கையே மேலானது என்பது நினைவிலிருக்கவேண்டும். இல்லறம் என்ற கட்டுப்பாட்டுக்குள் அடங்காத ஒரு பெண் சர்வசுதந்திரமாய் நடக்கமுற்பட்டால் சமுதாயம் என்ற அழகான கோபுரம் இடிந்துவிழுந்துவிடுமல்லவா?

# கச்சதீவு நெடுந்தீவின் சீதனச் சொத்து

## அரசாங்கம் நன்றாக ஆராய்ந்து முடிவு காணவேண்டும்

திருமதி எம். புஷ்பராணி

**கச்சதீவுயாருக்குச் சொந்தம்? இந்தியாவுக்கா, இலங்கைக்கா என்ற முடிவு விரைவில் செய்யப்படு மென்று பிரதமர் சமீபத்தில் பார்லிமெண்டில் அறிவித்திருந்தார். கச்சதீவு நெடுந்தீவுக்குத் தான் சொந்தமென்றும் இதுசம்பந்தமாக அரசாங்கம் முடிவெடுப்பதற்கு முன்னர் நெடுந்தீவில் அரசாங்கம் இதுபற்றி ஆராயவேண்டுமென்றும் திருமதி எம். புஷ்பராணி கூறுகிறார்.**

நெடுந்தீவில் இருந்து 10 மைல்களுக்கப்பால் தென் மேற்குப் பக்கமாக சச்சதீவு யாருக்குரிய தென்றபிரச்னை இலங்கை அரசாங்கத்தின் தற்போதைய முக்கிய பிரச்னைகளில் ஒன்றாகும். கச்சதீவு இற்றைக்குப்பல வருடங்களாக நெடுந்தீவு மக்களின் கண்காணிப்பில் தான் இருந்து வருகின்றதெனலாம். கச்ச தீவில் அமைந்துள்ள அர்ச் அந்தோனியார் தேவாலயம் நெடுந்தீவு மக்களால்கட்டப்பட்டுபரிபாலிக்கப் பட்டுவருகிறது. அக்கோவிலை அமைத்தவரின் வழித்தோன்றலான திரு. வ. அந்தோனிப்பிள்ளை தற்சமயம் பலாலி விமானத்தளத்தில் வேலை செய்து வருகிறார். அவர் தான அக்கோவிலின்மூப்பராகவும் அக்கோவிலின் பராமரிப்பாளராகவும் இருந்து வருகிறார். அத்தோடு பண்டைக்காலத்தில் இக் கச்சதீவு ஒருவரின் சொந்தமாகவும், உறுதியுள்ளதாகவும் இருந்ததாம். நெடுந்தீவு உடையார் தமது மகளுக்கு சீதனமாக இத்தீவையும் கொடுத்ததாகவும் அவ்வுறுதி தற்சமயம் பெறக் கூடியதாக இருப்பதாகவும் இங்குபேசப் படுகிறது. ஆனால் இத்தீவு மூலம் ‘கள்ளக்கடத்தல்’ நடைபெறுகிறதென்ற சந்தேகத்தைக் கொண்டு இத்தீவு இந்தியாவுக்குரியதென்று கூறிவிட முடியாது. அத்துடன் எமது அரசாங்கமும் அலட்சியமாய் இருந்துவிடக்கூடாது. இத்தீவு இந்தியாவுக்குரியதானால் இலங்கையின் கடல் எல்லையும் குறைக்கப்பட்டுவிடும் அத்துடன் காலப்போக்கில் நெடுந்தீவும் இந்தியாவுக்குரியதாகியும் விடும். கச்சதீவு விவகாரம் பற்றி நல்ல அத்தாட்சிகள் நெடுந்தீவு மக்களிடம் இருக்கிறதா என எமது அரசாங்கம் முதலில் ஆராய வேண்டும். அதன் பின் தான் இந்திய அரசாங்கத்துடன் இது விஷயமாகத் தொடர்பு கொள்ள வேண்டும். கச்சதீவு மூலம் கடத்தல் நடைபெறுமேயானால் அதனை கடற்படையினர் அங்கு முகாமிட்டு தாராளமாக நிறுத்திக் கொள்ளலாம். அததோடு விமானப்படையினரும் தற்போது ரோந்து சுற்றுவதால் கள்ளக்கடத்தலை கட்டுப்படுத்தி விடலாம். நெடுந்தீவில் இருந்து 10 மைல்களுக்கப்பால் அமைந்துள்ள இத்தீவில் இருந்து கள்ளக் கடத்தல் செய்யப்படுமேயானால் கரை வந்து சேருவதற்குள் தாராளமாக அவர்களைக் கைது செய்து விடலாம். நெடுந்தீவில் உள்ள அரசாங்க அதிகாரிகளும் கடற்படையினரும் எச்சரிக்கையாக இருந்தால் கள்ளக் கடத்தலை தாராளமாகக் கட்டுப்படுத்தலாம்.

ஆசிரியருக்கு கடிதம்

## ஆணுக்கு ஒரு சட்டம்; பெண்ணுக்குஒருசட்டமா?

‘நேற்று ஒரு இ. போ. ச. பஸ்ஸில் பிரயாணம்செய்து கொண்டிருந்தேன். மழை கொட்டு கொட்டு என்று கொட்டியது. வழியில் ஓரிடத்தில் இரு இளம் பெண்கள் ஒரு கடைத் தாழ்வாரத்தில் மழைக்கு ஒதுங்கி நின்றுகொண்டு கையைக் காட்டி பஸ்ஸை நிற்பாட்டினார்கள். பஸ் நிற்பாட்டும் இடம் சுமார் நூறு யாருக்கு அப்பால் இருநதபோதிலும் ட்ரைவர் பஸ்ஸை நிற்பாட்டி அவர்களை ஏற்றிக் கொண்டது எனக்கு மிகவும் ஆச்சரியமாயிருந்தது. காருண்யநெஞ்சம் படைத்தவர் என்று நினைந்துக் கொண்டேன்.

சற்று அப்பால் நான் இறங்கவேண்டிய இடம். மழை இன்னும் சோனாவாரியாக பெய்துகொண்டிருந்தமையால் பஸ் நிற்பாட்டும் இடத்திற்கு சுமரர் 10 யார் தூரத்துக்குஇப்பாலுள்ள ஒரு கடையில் நிற்பாட்டுங்கள் என்று ட்ரைவரைக் கேட்டேன்.

அவருடைய சட்டப் புத்தகத்தில் ஆணுக்கு ஒரு சட்டம் பெண்ணுக்கு ஒரு சட்டம் என்று எழுதியிருப்பதை நான் எதிர்பார்க்கவில்லை. என் வேண்டுகோளை நிராகரித்துவிட்டு பஸ் நிற்பாட்டவேண்டிய இடத்தில் என்னை இறக்கிவிட்டார்.

ஆணுக்கு ஒரு சட்டம் பெண்ணுக்கு ஒரு சட்டமா, ஐயா!

கா. வே. தர்மலிங்கம்.
நீர்வேலி.

### இன்று யாழ்ப்பாண நகரில்

## நீதிராசாவுக்கு பாராட்டு விழா

யாழ்ப்பாணம், ஞாயிறு

கொழும்பு மாநகரசபை அங்கத்தவர் திரு. த. நீதிராசா செனட்டராக தெரிவு செய்யப்பட்டதைப்பாராட்டு முகமாக இன்று மாலை யாழ் மாநகரசபை மண்டபத்தில்திரு. ஹன்டி பேரின்பநாயகம் தலைமையில் அவருக்கோர் வரவேற்பளிக்கப்படவிருக்கிறது. உடுப்பிட்டி எம். பி. திரு. மு. சிவசிதம்பரம், உடுவில் எம். பி. திரு. தர்மலிங்கம், திரு. த. குமாரசாமிப் புலவர், மேலதிக அரசாங்க அதிபர் திரு-ஜே எம். சபாரத்தினம், வித்துவான்கே. கே. நடராசன், உதவி உள்ளூராட்சி ஆணையாளர் திரு. எஸ். சி. மாணிக்கவாசகர் உதவி அரசாங்க அதிபர் திரு. கி. முருகேசம்பிள்ளை ஆகியோர் பாராட்டுரை வழங்குவர்.

வண்ணை வைத்தீஸ்வரன் கோவிலடியிலிருந்து திரு. நீதிராசா ஊர்வலமாக நகர மண்டபத்துக்கு அழைத்து வரப்படுவார்.

## வித்தியாதிகாரிக்கு பாராட்டுவிழா

உரும்பராய், சனி

கோப்பாய் வட்டார வித்தியாதிகாரியாகக் கடமையாற்றி ஒய்வுபெற்ற திரு. ஏ. சிவகுருவுக்கு வலி-கிழக்குத் தமிழ் ஆசிரியர் சங்கத்தினர் பாராட்டுவிழா ஒன்றினை நடாத்துவதென்ற தீர்மானம் நீர்வேலி அத்தியார் இந்துக்கல்லூரியில் நடைபெற்ற கூட்டமொன்றில் நிறைவேற்றப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாதுகாப்பற்ற மீன்பிடி வள்ளங்களில் பிரயாணம் செய்யவேண்டிய அவலநிலை

## நெடுந்தீவுப் பிரயாணிகள் அவதி

நெடுந்தீவு, சனி

நெடுந்தீவுப் பிரயாணிகள் கடந்த சில தினங்களாகமீன்பிடி வள்ளம் மூலம் பிரயாணம் செய்யவேண்டிய அவலநிலையை அடைந்துள்ளார்கள். காற்றும், மழையும், கடல் கொந்தளிப்புக்குமிடையே பாதுகாப்பற்ற, வசதியற்ற மீன்பிடிவள்ளத்தில் பெண்களும், பிள்ளைகளும், வயோதிபர்களும் பிரயாணம் செய்கிறார்கள். நெடுந்தீவு சேவைக்கென ஒதுக்கப்பட்ட பொதுமராமத்து இலாகா மோட்டார் படகுகள், 'இராஜேஸ்வரி', 'அலையரசி', 'எலாரு', 'சில்வஸ்பிறே' ஆகியநான்கிலும் 'சில்வஸ்பிறே' மட்டும்தான் சிலதினங்களுக்குமுன் தனித்துநின்று சேவை செய்தது. ஆனால் அதுவும் பழுதடைந்தமையால் நெடுந்தீவு மக்கள் இக்கதிக்குள்ளாகியிருக்கிறார்கள். இச்சேவை அடிக்கடி பாதிக்கப்படுவதால்நெடுந்தீவு ஆழ்கடலில் சேவைசெய்வதற்குகந்தஇம் மோட்டார் படகுகளை பொதுமராமத்து இலாகா கவனிக்காதிருப்பது பிரயாணிகளுக்குப் பெரிதும் அதிருப்தியை அளித்துள்ளது.

## "தமிழுரிமை மசோதாவை நாம் ஏன் எதிர்த்தோம்!"

புன்னாலைக்கட்டுவன், சனி

"தமிழுரிமை விசேஷ மசோதா என்ற போர்வையில் ஆங்கில மொழியைத் தொடர்ந்து நிர்வாகமொழியாக வைத்திருக்க முயற்சித்த காரணத்தாலேயே எமது கட்சி அதை எதிர்த்ததேயன்றி தமிழர் மீது கொண்ட வெறுப்யன்று"

இவ்வாறு சமசமாஜக் கட்சிப் பிரமுகர் திரு அ. விசுவநாதன் நேற்று மாலை, உரும்பராய் இந்துக் கல்லூரிச் சரித்திர அரசியல் மன்றத்தில் உரையாற்றுகையில் கூறினார்.

திரு. துரை. மனோகரன் தலைமையில் நடந்த இக்கூட்டத்தில் அவர் தொடர்ந்து பேசுகையில் குறிப்பிட்டதாவது: 'தேசியமயக்கொள்கையை எதிர்த்து சுதந்திரக் கட்சி அரசாங்கத்தை வீழ்த்த உதவிய தமிழ் எம். பி.க்கள், திருக்கோணமலைத் துறைமுகம் தேசியமயமாக்கப்பட்டபின்னரும் யு. என். பி.யுடன் ஒட்டிக்கொண்டிருப்பது, அவர்களுடைய அரசியற் சந்தர்ப்பவாதத்தைக் குத்திக்காட்டுகிறது. மேலும், மாவட்ட சபைகள் தமிழினத்தை இரு மாகாணங்களில் அடக்காது கச்சேரி முறையை ஒழிக்க உதவுமாயின் தமது கட்சி அம்மசோதாவை ஆதரிக்குமென்றும் அவர் கூறினார்.

## புதிய நிர்வாகிகள்

பண்டத்தரிப்பு, சனி

சண்டிருப்பாய்- சேந்தான்குளம பஸ்பிரயாணிகள் சங்கத்தின் 14-வது வருடாந்தப் பொதுக்கூட்டம் அண்மையில் நடைபெற்றபோது பின்வருவோர் புதிய நிர்வாகிகளாகத் தெரிவு செய்யப்பட்டனர்.

தலைவர்: திரு நித்தியானந்தம், உபதலைவர்கள்- திரு. ஆர். சவரிமுத்து, திரு. சி. நவரத்தினம், இணைக்காரியதரிசிகள்: திரு. குமாரசாமி, திரு. ஆர். கண்பதிப்பிள்ளை, தனாதிகாரிகள்: திரு. கே. கதிர்காமகதம்பி, திரு. எஸ். கதிரவேல். 12 பேரடங்கிய நிர்வாகசபை ஒன்றும் தெரிவு செய்யப்பட்டது.

## அடையாள அட்டை

சுழிபுரம், சனி

சுழிபுரம் மீனவர்களுக்கு கடல் தொழில் செய்வதற்கான அடையாள அட்டைகளைப்பெற்றுக்கொடுப்பதில் சுழிபுரம் கிராமசேவையாளர் நடவடிக்கை எடுத்து வருகிறார். சுழிபுரம் பகுதியிலுள்ள கடல்தொழில் செய்யும் மீனவர்களின் புள்ளிவிபரங்கள் சேகரிக்கப்பட்டு அரசாங்க அதிபருக்குச் சமர்ப்பிக்கப்படவிருக்கின்றன.

காங்கேசன்துறை

## விவசாயிகள் அதிருப்தி

அளவெட்டி, சனி

சிமெந்துத் தொழிற்சாலை விஸ்தரிப்புக்கெனத் தம்மிடமிருந்து காணிகளை அரசாங்கம் சுவீகரித்து, சிமெந்துத் தொழிற்சாலையில் ஊதியம் பெறும் சிமெந்துத்தொழிலாளர்களுக்கு விவசாயம் செய்ய வழங்கியதையிட்டு, சிமெந்துத் தொழிற்சாலை விஸ்தரிப்புக்கு காணிகளை வழங்கிய விவசாயிகள் அதிருப்தியடைந்துள்ளனர்.

விவசாயம்செய்ய நிலம் இல்லாமலும், வேறு தொழில் செய்ய மூலதன வசதியில்லாமலும்மக்கள்இருக்க, தொழிற்சாலையில் நிரந்தரசம்பளம் பெறும் தொழிலாளர்களுக்கு குறைந்த குத்தகையில் நிலம் வழங்கப்பட்டமையினால் இப்பகுதி விவசாயிகள் தாம் உற்பத்தி செய்யும் பொருட்களை விற்பனை செய்யும் பொழுதும் பல வழிகளிலும் கஷ்டம் ஏற்படுமென அஞ்சுகின்றனர்.

## இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம்

### ஞாயிறு 5-11-67

[செய்திகள்:-காலை 7-00, பகல் 12-45, மாலை 6-00, இரவு 9-00].

344 மீற்றர் & 61 மீற்றர்

காலை 6-30 நாதாஞ்சலி, 6-35சைவநற்சிந்தனை, 6-40 கத்தோலிக்கநற்சிந்தனை, 6-45 துதிப்பாடல்கள், 7-25 தினக்குறிப்பு, 7-30 சுப்பிரமணியதோத்திரம், 8-00 நிலைய ஒலிப்பதிவுகள், 8-15 இஸ்லாமியகீதங்கள்.

344 மீற்றர் & 49 மீற்றர்

பகல் 12-00 சித்திரகானம், 1-00 மாதர் விருப்பம்.

344 மீற்றர் & 61 மீற்றர்

மாலை 5-00 பிறந்ததின வாழ்த்துக்கள், 5-30 கதம்பஇசை.

இரவு 6-15 தாளவாத்தியக்கச்சேரி, 6-45 கிறிஸ்தவஆராதனை, 7-15 பாவளம், 7-30 நேயர்கடிதங்கள், 7-45 அமரக்குறள் — வி. சுப்பிரமணியப், 8-00 முஸ்லிம்நிகழ்ச்சி, 8-30 இசைக்கச்சேரி — என். பத்மனாதன்.

## புதிய நிர்வாகிகள்

பண்டத்தரிப்பு, சனி

பண்டத்தரிப்புக் கோவில்பற்று பஸ் பிரயாணிகள் சங்க புதிய உத்தியோகத்தர் விபரம் வருமாறு:

தலைவர்: எஸ். பி விஜயரத்தினம், உப தலைவர்: வி. ஆர். போல், செயலாளர்: கி. வ. அரியரத்தினம், தனாதிகாரி: எஸ். இ. தேவநாயகம்.

## "சிரமதானம் நமக்குபுதிதல்ல"

பண்டத்தரிப்பு, சனி

"ஒருநாட்டைச்சிறப்புறச் செய்பவர்கள் வாலிபர்கள். நாட்டின் திறவுகோல் அவர்கள் கைகளிலேயே உள்ளது. நமக்கு வேண்டியவற்றை நாமே செய்துகொள்ள வேண்டும். அரசாங்கத்தையோ அன்றி வேறு ஸ்தாபனங்களையோ எதிர்பார்த்திருக்கக்கூடாது. சிரமதானம் நமக்குப் புதிதல்ல. நமது முன்னோர் காலத்திலே இது ஆரம்பமானது. நாட்டின் தேவைகளைச் சிரமதானம் மூலமே அவர்கள் செய்தனர்."

இவ்வாறு சிறுவிளான் கிழக்கு கிராமமுன்னேற்றச் சங்கம், சனசமூகநிலையம் என்பவற்றால் ஆரம்பிக்கப்பட்ட சுடுகாடு திருத்தும் சிரமதான வேலையை ஆரம்பித்துப் பேசிய மேற்படி நிலையங்களின் தலைவர் திரு. பொ. கீர்த்திசிங்கம் குறிப்பிட்டார். 25க்கு மேற்பட்ட வாலிபர்கள் இச்சிரமதான வேலையில் பங்கு பற்றினர்.

## இலங்கை வந்துள்ள பிரிட்டிஷ் பொறியியல் நிபுணர்

கொழும்பு, நவ. 4

பிரிட்டனிலிருந்து ஒரு திட்ட பொறியியல் நிபுணர் இலங்கை விஜயம் செய்திருக்கிறார். இலங்கை அரசாங்கத்தின் சிறுகைத்தொழில் அபிவிருத்தித் திட்டத்திற்கு உதவியளிக்குமுகமாகவே இவர் இங்கு அழைக்கப்பட்டிருக்கிறார்.

மோட்டார் வாகன உபகரணங்களை உற்பத்தி செய்யும் பிரபல பிரிட்டிஷ் நிறுவனமான ஜோசப் லுக்காய் அண்ட் கம்பனியைச்சேர்ந்த சிரேஷ்ட திட்ட பொறியியலாளரான திரு. ஈ. டி. ஏ. பொனிஹாம் இலங்கையில் ஒரு வருட காலம் வரை தங்கியிருப்பார். இவர் இலங்கையில் தங்கியிருக்கும் வேளை இலங்கையின் சிறுகைத்தொழில் சேவை நிறுவனம் ஒரு திட்டப் பிரிவை ஆரம்பித்து, செயாலற்றுவதற்கு உதவியளிப்பார்.

## சுட்டுக்கொலை செய்ய முயற்சித்ததாகவழக்கு

குரும்பசிட்டி, வெள்ளி

சங்கானையைச் சேர்ந்த கோவிந்தன் ஆறுமுகம் என்பவர் அதேயிடத்தைச் சேர்ந்த சின்னத்துரை நவரத்தினத்தைத் துப்பாக்கியால் சுட்டுக் கொலை செய்ய எத்தனித்ததாக சங்கானைப் பொலிசார் மல்லாகம் மாஜிஸ்திரேட் திரு. ரி. எஸ். நெத்தசிங்கா முன்னிலையில் வழக்குத் தாக்கல் செய்தனர் எதிரியை ரூபா 500பிணை செலுத்திச் செல்லுமாறு உத்தரவிட்ட நீதிபதி மேல் விசாரணையை இம்மாதம் 17-ந் திகதிக்கு ஒத்திவைத்தார். எதிரி சார்பில் வழக்கறிஞர் திரு. ஆர். ஜே. செல்வரத்தினம் ஆஜரானார்.

# தரையில் இழுபட்டார் வயோதிப மாது

## இ.போ.ச. பஸ்ஸில் சம்பவம்

யாழ்ப்பாணம், ஞாயிறு

இ. போ. ச. பஸ்ஸில் தொங்கியபடி தரையில் இழுபட்டார். வயோதிப மாது ஒருவர். இந்தப் பரிதாபகரமான சம்பவம் நேற்றுக் காலை 9-20 மணிக்கு யாழ்ப்பாணம் பஸ் நிலையத்தில் நடைபெற்றது.

யாழ்ப்பாணம் பஸ் நிலையத்திலிருந்து நெல்லியடியூடாகப் பருத்தித்துறைக்குப் போவதற்குச் சென்ற பஸ்ஸிலேயே இந்தச் சம்பவம் இடம்பெற்றது.

பஸ்ஸுக்குள் குறிப்பிட்ட வயோதிபமாது கம்பிகளைப் பிடித்து ஏறுவதற்கு முயற்சிக்கையில் கண்டக்டர் அதனைக் கவனிக்காமல் மணியை அடிக்கவே பஸ் புறப்பட்டதாம். இதனால் அந்த வயோதிப மாது கம்பிகளில் கைகளைப் பிடித்தபடி முழங்கால் தரையில் உரசப்பட்டுக்கொண்டு இழுபட்டார். உடனே அதனைப் பார்த்து நின்ற பிரயாணிகள் பஸ்ஸை கைதட்டி நிறுத்தியதால் அந்த வயோதிபமாது காப்பாற்றப்பட்டார்.

## களைபிடுங்கினர்

சுழிபுரம், சனி

அறுபதுக்கு மேற்பட்ட பண்டத்தரிப்பு இந்துக்கல்லூரி மாணவ, மாணவிகள் களை பிடுங்கினர். கல்லூரி அதிபர் திரு. என். சிவஞானம் வயலில் இறங்கி களை பிடுங்குதலைஆரம்பித்து வைத்தார். களை பிடுங்கும் மாணவர்களுடன் திரு. மு. கிருஷ்ணபிள்ளை, திரு. எஸ். கீர்த்திசிங்கம் ஆகிய இரு ஆசிரியர்களும் சேர்ந்துகளை பிடுங்கினர்.

## மாட்டு வண்டிச் சவாரி

யாழ்ப்பாணம், ஞாயிறு

யாழ்ப்பாணம் கோட்டை மைதானத்தில் இம்மாதம் 9-ம் திகதி மாட்டு வண்டிச் சவாரியொன்று நடைபெறவிருக்கின்றது. திருநெல்வேலி காளி கோவிலடி சனசமூக நிலையத்தின் ஆதரவில் நடைபெறவிருக்கும் இப்போட்டிக்கு உதவி அரசாங்க அதிபர் திரு. ரி. முருகேசம்பிள்ளை தலைமை வகிப்பார். [ந. நி.]

## 'பாடசாலைகளில் பாகுபாடுகள் அகற்றப்படவேண்டும்'

யாழ்ப்பாணம், ஞாயிறு

'யாழ்ப்பாணத்தில் சில பாடசாலைகளில், சமய, கலாச்சார வைபவங்கள் நடைபெறும்போது சாதிப் பாகுபாடு காட்டப்பட்டு வருவது வருந்தக்கூடியது. இதுபற்றி சமீப காலங்களில் சிங்கள மக்கள் மத்தியில், உணரவும் பேசவும் தொடங்கியுள்ளார்கள். இக் குறைபாடுகள் சிங்கள மக்கள் மத்தியிலிருந்து அநேக வருடங்களுக்கு முன் அகற்றப்பட்டுவிட்டது, தமிழ் கல்விமான்களும், சுய கௌரவங்களைவிட்டு, இக் குறைபாடுகளை நீக்கமுன்வரவேண்டும்."

ஸ்ரீலங்கா ஜாதிக குருசங்க யாழ்ப்பாண கிளைக் கூட்டத்தில், தாய்ச்சங்கத்தைச் சேர்ந்த திரு. ஏச். டி. வைத்தியசேகரா பேசும்போது மேற்கண்டவாறு கூறினார்.

திரு. வ. கிருஷ்ணபிள்ளை தலைமையில் நடந்த இக் கூட்டத்தில், திரு. வைத்தியசேகரா மேலும் கூறியதாவது: சென்ற சில வருடங்களாக ஆசிரியர்சங்க பிரதிநிதிகளைச் சந்தித்து ஆசிரியர்களின் குறைபாடுகளைப் பற்றி பேசவிரும்பாத கல்வி அதிகாரிகள், எமது நாட்டிலுள்ள 14 சங்கங்களுக்குமேல் ஒன்றுபட்டு ஐக்கியத்தை வளர்க்க முற்பட்டதன் காரணமாக ஆசிரியசங்கங்களின் சம்மேளனத்தின் தூதுக் குழுவொன்றைசந்திக்க இணங்கியுள்ளனர். ஆசிரியர்கள் ஒன்றுபடுவதன் மூலமே உரிமைகளைப் பெறமுடியும். போராட்டங்களை நடத்தாமல் இலட்சியங்களை பெறமுடியாது.

# நெடுந்தீவுக் கோட்டை டகோபாவா?

## ஆராய்ச்சியாளருக்கு ஒரு பிரச்னை

நெடுந்தீவு, ஞாயிறு

நெடுந்திவு மேற்குக் கடற்கரையில் அமைந்துள்ள வெடியரசன் கோட்டையை தற்போது சில சரித்திர ஆராய்ச்சியாளர்கள் அது ஒரு 'டகோபாவாக' இருக்கலாம் எனச் சந்தேகிக்கிறார்கள். ஆனால் இது வீகாமன் கோட்டையா அல்லது வெடியரசன் கோட்டையா என்பது இங்குள்ளவர்களின் வாதமாக இருக்கின்றது. வீகாமனின் தெய்வம் ஐயனார் ஆகையால் இக்கோட்டையின் அருகாமையில் ஐயனார் கோவில் அமைந்திருப்பதாலும் வீகாமன் நெடுந்தீவு மேற்கில் வந்திறங்கியவன் என்பதையும்கொண்டு வீகாமன் கோட்டையாகவும் இருக்கலாம் என சிலர் யூகிக்கிறார்கள். இதற்கிடையில் இது டகோபாவாக இருக்கலாம் எனச் சந்தேகிப்பதற்கு எந்தவித ஆதாரமும் இல்லையாம். இருந்தும் இதனை புதை பொருள் ஆராய்ச்சியாளர்கள் கூடிய விரைவில் ஆராய்ச்சி நடாத்த இருப்பதாக அறியப்படுகிறது. இது சம்பந்தமாக ஒரு அதிகாரியும் இங்குவந்து சில பொருட்களையும் எடுத்துச் சென்றுள்ளளார்.

## பிரசுரங்களும் சிங்களத்தில்

புன்னாலைக்கட்டுவன், சனி

அரசாங்கக் கடிதங்கள் மட்டுமன்றி இப்பகுதிப் பாடசாலைகள் சிலவற்றுக்கு செய்திப்பிரசுரங்களும் சிங்களத்திலேயே வந்துள்ளன. ஐக்கிய நாடுகள் தினத்தைக் கொண்டாட வேண்டுமெனக் கூறும் கல்விப் பகுதியினர் ஐ. நா. சம்பந்தமான சகல சிங்களப் பிரசுரங்களையும் அனுப்பியுள்ளனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ். பாடசாலைகள் உதைபந்து சுற்றுப்போட்டி

# மகாஜனு அமோக வெற்றி

## 3-ம் பிரிவில் பரமேஸ்வரா வென்றது

குரும்பசிட்டி, சனி

யாழ்ப்பாணப் பாடசாலைகள் விளையாட்டுச் சங்க அமைப்பின்கீழ்நடைபெற்று வரும் உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டியில் தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரிக்கும் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரிக்குமிடையே நடைபெற்ற இரண்டாம் பிரிவுக்கோஷ்டிகளின் உதைபந்தாட்டப் போட்டியில் மகாஜனக் கல்லூரி 1—0 கோல்களால் வெற்றியீட்டியது. வெற்றிபெற்றகல்லூரி சார்பில் ஜெகசோதி என்ற வீரர் கோல் போட்டுக் கொண்டார். திரு வி.கணேசலிங்கம் மத்தியஸ்தம்வகித்தார்.

இரு கல்லூரிகளினதும் மூன்றும் பிரிவுக்கோஷ்டிகள் மோதிக்கொண்ட உதைபந்தாட்டப்போட்டியிலும் மத்திய கல்லூரியை 7-0 கோல்களால் மகாஜனக் கல்லூரி வீரர் தோற்கடித்தனர். இப்போட்டிக்கு திரு. எஸ் சந்தியாப்பிள்ளை மத்தியஸ்தராகக்கடமையாற்றினர். இவ்விருபோட்டிகளும் தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி விளையாட்டு அரங்கில் நடைபெற்றன.

இதே சுற்றுப் போட்டியில் தெல்லிப்பழை யூனியன் கல்லூரி விளையாட்டு மைதானத்தில் திருநெல்வேலி பரமேஸ்வராக் கல்லூரிக்கும் யூனியன் கல்லூரிக்குமிடையேநிகழ்ந்த 2-ம்பிரிவு உதைபந்தாட்டப்போட்டிவெற்றி தோல்வியின்றி முடிவடைந்தது. இரு தரப்பு வீரர்களும் ஒரு கோல்களும் போடவில்லை. இப்போட்டிக்கு திரு. எஸ். சண்முகரத்தினம் மத்தியஸ்தராகக் கடமையாற்றினர்.

பரமேஸ்வரா — யூனியன் 3-ம் பிரிவுக் கோஷ்டிகளுக்கிடையே நடைபெற்ற போட்டியில் யூனியன் 2—1 கோல்களால் பரமேஸ்வராவை வென்றது இப்போட்டிக்கு திரு. கே. கிருஷ்ணன் மத்தியஸ்தம் வகித்தார்.

---

## உதைபந்தாட்டப் போட்டி

பண்டத்தரிப்பு, சனி

வலிகாமம் மேற்கு விளையாட்டுப்பிரிவு (1) ஆதரவில் உள்ள விளையாட்டுக்கழகங்களுக்கிடையேயான உதைபந்தாட்டப்போட்டிகள்இம் மாதம் 14ந்திகதி ஆரம்பமாகும். இப்போட்டி இளவாலை என்றியரசர் கல்லூரிமைதானத்தில்நடைபெறும்.

உதைபந்தாட்டம்

## தீபாவளி மோதலில் சமமான முடிவு

யாழ்ப்பாணம், ஞாயிறு

பாஷையூர் யங் ஒலிம்பியன்ஸ் விளையாட்டுக் கழகத்துக்கும் காரைநகர் யூனியன் விளையாட்டுக் கழகத்துக்குமிடையே தீபாவளிப் பண்டிகையை முன்னிட்டு காரைநகர் இந்துக்கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற உதைபந்தாட்ட மோதலில் இரு கோஷ்டியினரும் தலா 2—2 கோல்கள் பெற்று சமமாக ஆட்டத்தை முடித்தனர்.

போட்டிக்கு திரு. கே. சிவானந்தா மத்தியஸ்தராகக் கடமையாற்றினர்.

[வி. நி.]

## பொலிஸார் வெற்றி

யாழ்ப்பாணம், ஞாயிறு

யாழ்ப்பாணம் பொலிஸ் உதைபந்தாட்டக் கோஷ்டிக்கும் நல்லூர் ருவின்ஸ் உதைபந்தாட்டக் கழகத்துக்குமிடையில்நடைபெற்ற உதைபந்தாட்டப் போட்டியில் பொலிஸார் 1—0 கோல்களால் வெற்றிபெற்றனர். யாழ்ப்பாணம் பொலிஸ் மைதானத்தில் நடைபெற்ற இப்போட்டிக்கு திரு. விக்கிரமசிங்கா மத்தியஸ்தம் வகித்தார்.

[ந. நி.]

## சங்கிலியன் வென்றுன்

பண்டத்தரிப்பு, சனி

பண்டத்தரிப்புசங்கிலியன் கழகத்திற்கும், பலாலி இராணுவக்கோஷ்டிக்குமிடையே நடைபெற்ற சிநேகபூர்வமான உதைபந்தாட்டப்போட்டியில் சங்கிலியன் கழகத்தினர் 4—1 கோல்களால் ராணுவகோஷ்டியைத் தோற்கடித்தனர். இவ்வாட்டம் பண்டத்தரிப்பு இந்துக்கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது.

## இந்திய—இலங்கை நீச்சல் போட்டி

கொழும்பு, ஞாயிறு

இலங்கை-இந்திய இரண்டாவது நீச்சல் போட்டி இம் மாதம் 14-ம்,15-ம், திகதிகளில் நடைபெறவிருக்கிறது. இப்போட்டியில் 23 இந்திய நீச்சல் வீரர் கலந்து கொள்கின்றனர்.

## யாழ்.சென்.ஜேம்ஸ வெற்றி

பண்டத்தரிப்பு, சனி

இளவாலை சென். ஜேம்ஸ் இளைஞர் கழகத்துக்கும் யாழ்ப்பாணம் சென்ஜேம்ஸ் இளைஞர் கழகத்துக்கும்மிடையே நடந்த உதைபந்தாட்டப் போட்டியில் இளவாலை சென்ஜேம்ஸ் கழகம் ஒரு கோல் போட்டது. யாழ்ப்பாணம் சென்ஜேம்ஸ் கழகத்தினர் 3 கோல்கள் போட்டு வெற்றியீட்டினர். இப்போட்டி இளவாலையில் நடைபெற்றது.

## கொழும்புக்கு பீற்றூட் ஏற்றுமதி

அளவெட்டி, சனி

அளவெட்டிப் பகுதியிலுள்ள அம்பனை வயலிலும் அதை அடுத்த பகுதிகளிலுமிருந்து இம்முறைசுமார்15, 000ருத்தல் பீற்றூட்கிழங்கு கொழும்புக்கும் அதை அடுத்த பகுதிகளுக்கும் அனுப்பிவைக்கப் பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதற்குமுன் தென் இலங்கையிலிருந்து பீற்றூட் கிழங்கு இங்கு இறக்குமதி செய்யப் பட்டது. கருணைக்கிழங்கு முதலியமற்றும் கிழங்கு வகைகளும், அதிகமாகத் தென்னிலங்கைக்கு ஏற்றுமதியாகின்றன. வழமையிலும் பார்க்க இவ்வருடம் வெங்காயமும் அதிகமாக அனுப்பப்பட்டுள்ளதாக தெரிவிக்கப் பட்டுள்ளது.

## உணவுற்பத்தி விஸதரிப்புத் திட்டம்

அளவெட்டி, சனி

அரசாங்கத்தின் உணவு உற்பத்தித் திட்டத்தை விரிவுபடுத்தி தீவிரமாக்குவது சம்பந்தமாக ஒரு விசேஷ கூட்டம் தெல்லிப்பழையிலுள்ள வலி- வடக்குக் காரியாதிகாரி அலுவலகத்தில் நடைபெற்றது.

யாழ்ப்பாண மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் திரு. ஜே. எம். சபாரத்தினம் தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் வலி வடக்குப் பிரிவைச் சேர்ந்த கிராம சேவையாளர்கள், கிருஷிகப்பகுதி அதிகாரிகள், பல நோக்குக் கூட்டுறவுச் சங்கப் பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.

## 60 தொழிலாளர் சேர்க்கப்படுவார்களா?

திருகோணமலை, சனி

தேயிலை ஏற்றுமதித் தொழிலில் ஈடுபட்டு, ரயில்வே வெகன்களிலும், லொறிகளிலுமிருந்து சரக்கை களஞ்சிய அறைகளில் இறக்கிவைக்கும் தொழிலாளர் களாகிய 60 பேரை திருகோணமலை தேயிலை நிர்வாக ஸ்தாபனம்பொறுப்பேற்று இவர்களை தமது ஸ்தாபனத்தில் உள்ளடக்க ஏற்கனவே முடிவு செய்திருந்தபோதும், கொழும்பில் உள்ள இந்த ஸ்தாபனத்தின் தலைமை அதிகாரிகளின் கட்டளைப்படி தொழிலாளிகளைச் சேர்த்துக் கொள்வதை தற்காலிகமாக நிறுத்தி வைத்திருக்கிறது.

துறைமுகச்சரக்கு கூட்டுத்தாபனம் இத்தொழிலாளிகளையும் பொறுப்பேற்பதற்கான முடிவை அரசாங்கத்தோடு கலந்தாலோசித்துக் கொண்டிருப்பதே இதற்கான காரணமெனத் தெரிகிறது.

இத்தொழிலாளிகள் கூட்டுத்தாபனத்தில் சேர்த்துக் கொள்ளப்பட்டால் பிற நாட்டுச் சரக்கு இறக்குமதி தொழிலில் ஈடுபட்டு அவ்இறற்க்குமதிப் பொருள்களை ரெயில்வே வெகன்ஸிலும் லொறிகளிலும், ஏற்றுமதி செய்யும் தொழிலாளிகள் [illegible] கூட்டுத்தாபனத்தில் சேர்க்கப்படுவார்களென நம்பப்படுகிறது.

# பல்கலைக்கழக மாணவர் தோல்வி

பண்டத்தரிப்பு, சனி

பண்டத்தரிப்பு வை. எம். சி. ஏ. கோஷ்டியினருக்கும் பேராதனைப் பல்கலைக்கழக மாணவர்கோஷ்டிக்கு மிடையே, நடைபெற்ற சிநேகிதபூர்வமான உதைபந்தாட்டப் போட்டியில் வை. எம். சி. ஏ. கோஷ்டியினர் மூன்று கோல்களைப் போட்டுவெற்றியீட்டினர். பேராதனை மாணவர் கோஷ்டியினர் ஒரு கோலும் போடவில்லை. இளவாலை என்றியரசர் கல்லூரி மைதானத்தில் இப்போட்டி நடைபெற்றது.

## கருவாடு வழங்க ஏற்பாடு

யாழ்ப்பாணம், ஞாயிறு

வட இலங்கை உணவு தானிய மொத்தவியாபாரிகள்இறக்குமதியாளர் சங்கம் வியாபாரிகளுக்கு சங்கம் மூலம் கருவாடு விநியோகம் செய்ய ஏற்பாடு செய்துள்ளது.

இவ்விஷயமாக உபஉணவு கட்டுப்பாட்டு அதிகாரி, கூட்டுறவுமொத்தவிற்பனவு ஸ்தாபனம் ஆகியவற்றுடன் சங்கம் தொடர்பு கொண்டுள்ளது. கருவாடு பெறுவதற்கு வியாபாரிகளிடமிருந்து கிடைக்கும் விண்ணப்பங்களை சங்கம் பரிசிலனை செய்துவருகிறது.

## ரூபா 100 அபராதம்

சாவகச்சேரி, சனி

மைதடியைச் சேர்ந்த காசிப்பிள்ளை ஆறுமுகம் என்பவர் சட்டவிரோதமாகச் சாராயம் விற்றுரென குற்றம்சாட்டித்தாக்கல் செய்யப்பட்ட வழக்கில் சாவகச்சேரி மாஜிஸ்திரேட் திரு.கே. விக்கினராசா எதிரியைக் குற்றவாளியாகக்கண்டு ரூபா 100 அபராதம் விதித்தார்.

## ஐக்கியநாட்டு ஸ்தாபன தினம்

மண்டைதீவு, வெள்ளி

ஐக்கிய நாட்டு ஸ்தாபன தினமும், உலக சிறுர் தினமும் இன்று காலை மண்டைதீவு மகாவித்தியாலய மண்டபத்தில் மகாவித்தியாலய அதிபர் திரு. எச். டபிள்யூ. ஏ. நானியல் தலைமையில கொண்டாடப்பட்டது. மண்டைதீவு கார்த்திகேசு [illegible] வித்தியாசாலை, மண்டைதீவு றோமன் கத்தோலிக்கப் பாடசாலை மாணவர்கள், ஆசிரியர்கள் இக் கொண்டாட்டத்தில் கலந்து கொண்டனர்.

ஆசிரியர் திரு. கதிர்காமநாதன் செல்வன் ஆ. சந்திரசேகரம், திரு. சி. தியாகராசா உட்பட வேறு பலரும் உரையாற்றினர்கள்.

## தபால் பைகள் பிடிபட்டன

யாழ்ப்பாணம், ஞாயிறு

25 தபால் வெற்றுப் பைகள் யாழ்ப்பாணம் ஸ்ரான்லி வீதியிலுள்ள கராஜ் ஒன்றில் கைப்பற்றப் பட்டதாகத் தெரிவிக்கப் பட்டது.

யாழ்ப்பாணம் தபால் இலாகாவைச் சேர்ந்த இன்ஸ்பெக்டர் திரு. பி. அரியரத்தினமும், யாழ்ப்பாணம் பொலிஸ்நிலைய சப்இன்ஸ்பெக்டர் திரு. சிறிவர்த்தனவும் குறிப்பிட்ட கராஜில் இந்த தபால் வெற்றுப்பைகளைக் கைப்பற்றினர். இதுசம்பந்தமாக கைதுசெய்யப்பட்ட இருவர் மாஜிஸ்திரேட் முன் ஆஜர்செய்யப்பட்டு பிணையில் செல்ல அனுமதிக்கப் பட்டனர்.

# “புதிய நியமனங்கள் மூலம் காலி ஸ்தானங்களை நிரப்புக”

## வலி. கிழக்கு ஆசிரியர் தீர்மானம்

உரும்பராய், சனி

தென் இலங்கையிலுள்ள பாடசாலைகளில் இடங்கள் ஏற்பட்டமைக்குக் காரணம் ஆசிரியர்களுக்குப் புதிய நியமனங்கள் வழங்காமையேயாகும். நூற்றுக்கு மேற்பட்ட ஆசிரியை தராதரம் பெற்றோர்களும், பட்டதாரிகளும் ஏச். எஸ். ஸி. சித்தியெய்தியோர்களும் வேலையின்றிக் கஷ்டமுறுகின்றனர். அரசாங்கம் இவர்களுக்குப் புதிய நியமனங்கள் வழங்குவதன் மூலம் தென் இலங்கையில் உள்ள காலி இடங்களை நிரப்பவேண்டும். நீண்ட காலமாக ஆசிரியர்களுக்கு நியமனங்கள் வழங்கப்படவில்லை. எனவே இப்பொழுதேனும் ஆசிரியர்களுக்குப் புதிய நியமனம் வழங்கப் படவேண்டும்'' என்னும் தீர்மானம் அண்மையில் நீர்வேலியில் நடைபெற்ற வலி. கிழக்குத் தமிழ் ஆசிரியர் சங்க நிர்வாகசபையில் ஏகமனதாக நிறைவேறியது.

சங்கத் தலைவர் திரு. க. இ, குமாரசாமி தலைமையில் நடைபெற்ற இக் கூட்டத்தில், குறித்த நிர்வாகசபை உறுப்பினராக இருந்து தொண்டாற்றி அகால மரணம் அடைந்த அச்சுவேலி சரஸ்வதி வித்தியாசாலை ஆசிரியர் திரு. இ. சோமசுந்தரத்தின் ஆன்ம சாந்திக்காக பிரார்த்தனை நடைபெற்றது.

கோப்பாய் வட்டார வித்தியாதியாகாரியிருந்து ஓய்வு பெற்றதிரு. ஆ. சிவகுருவுக்கு ஓர் உபசாரவிழா நடத்துவதென்றும், சங்கத்தின் பன்னிருகோரிக்கைகள் சம்பந்தமான பிரசாரக் கூட்டம் இம் மாதம் 16-ம் திகதி நடைபெற ஒழுங்குகள் செய்வதெனவும் தீர்மானிக்கப்பட்டது.

மண்டைதீவில்

மக்களின் தோழன்!




ஈழவள நாட்டின் வியாபாரிகள் எல்லோருமே வாங்கி விற்பது இது ஒன்றேதான்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ்ப்பாண மாநகரசபை

## முட்டைகளை வீசி ஒரு கோஷ்டியினர் ஆர்ப்பாட்டம்

யாழ்ப்பாணம், சனி
பொதுசன நூலகத்தின் முன்னல், அமெரிக்க ஸ்தானிகரின் கார் வந்தபோது வீதியின் அருகே நூற்றுக் கணக்கான மக்கள் திரண்டு நின்றனர். அதில் நின்ற சிலர் செருப்புகளையும் முட்டைகளையும் காரைநோக்கி வீசி, 'வியட்ஞமை விட்டு வெளியேறு' எனக் கோஷமிட்டு ஆர்ப்பாட்டம் செய்தனர். இதனுல் ஸ்தானிகரின் கார் நூலகவாசலில் நிற்காமல் மணிக்கூட்டுக் கோபுரம் அருகில் சென்று நின்றது. உடனடியாக, கடமையாற்றிக் கொண்டிருந்த பொலிசார் கூச்சலிட்ட கூட்டத்தினரைக் கலைத்தனர். ஒரு வாலிபர் பொலிசாரால் கைதுசெய்யப்பட்டார்.

பொலிசார் துரத்திச் சென்றபோது அக்கூட்டத்தினர் மத்திய கல்லூரி விளையாட்டு மைதானத்திற்குள் பாய்ந்து கூச்சலிட்டனர். பொலிசார் விளையாட்டு மைதானத்துக்குள்ளும் சென்று அங்கு விளையாடிக் கொண்டு நின்ற மாணவர்களையும் தாக்க முயற்சித்தபோது, 'மாணவர்களைத் தாக்காதீர்' என ஒரு இன்ஸ்பெக்டர் தெரிவித்தார். கூட்டத்தினர் 'வயட்ஞமை விட்டுவெளியேறு' என்று எழுதப்பட்ட சேலையை கையில் வைத்திருந்தனர். சுமார் 10 நிமிஷங்களின் பின், அக்கோஷ்டியினர் அங்கிருந்து சென்றனர்.

மீண்டும் ஸ்தானிகரின் கார் திரும்பிவந்தபோது பின் கதவுக்கண்ணுடிகளில் முட்டை எறியப்பட்ட அடையாளங்கள் காணப்பட்டன,

## அப்பம் வாங்க...

1-ம் பக்கத் தொடர்ச்சி

ணம் சம்பந்தமாக நேற்று ஸ்தல விசாரணை நடத்தினுர் சம்பந்தப்பட்ட லொறி சிறுவனை மோதிவிட்டு அருகிலுள்ள புகையிரதக் கடவையிலும் நிறுத்தப்படாமல் அதி வேகமாகச் செலுத்திச் செல்லப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது.

இறந்த சிறுவனைப் பிரேத பரிசோதனை செய்யுமாறு உத்தரவிட்ட திரு. அல்பிரெட் துரையப்பா, சம்பந்தப்பட்ட லொறிச் சாரதியான பஞ்சாட்சரத்தை 1000 ரூபா பிணையில் செல்ல அனுமதித்து மீண்டும் இம் மாதம் 11ந்திகதி யாழ்ப்பாணம் மாஜிஸ்திரேட் நீதிமன்றத்தில் ஆஜராகுமாறு உத்தரவிட்டார். சம்பந்தப்பட்ட லொறியும் 5000 ரூபா பிணையில் செல்ல அனுமதிக்கப் பட்டது (ந.நி.)

## 'வட்டாரங்கள் சமமாக பிரிக்கப்படும்

### சிறுபான்மைத் தமிழருக்கும் சலுகைகள்'

### அமைச்சர் அறிவிப்பு

யாழ்ப்பாணம், சனி
யாழ்ப்பாண மாநகரசபை விசேஷ கமிஷனர்கள் நிர்வாகத்தில் சிறப்பாக நடைபெற்றுவருகிறது. நகரில் பலமுன்னேற்றங்கள்காணப்படுகின்றன. எந்தவிதமான சிறந்த ஆட்சி நடைபெற்ருலும், சுய ஆட்சிக்கு ஈடாகாது.'

யாழ்ப்பாணம் பொதுஜன நூலகத்தில் சிறுவர் பகுதியை திறந்துவைத்துப் பேசிய உள்ளூராட்சி மந்திரி திரு. எம். திருசெலவம் மேற்கண்டவாறு கூறினுர்.

மந்திரி திருச்செல்வம், திருமதி திருச்செல்வம், அமெரிக்க ஸ்தானிகர், அன்ரூ வி. குரே, ஆசிய பவுண்டேசன் டைரக்டர் திரு. ஜேம்ஸ் ஏச். நொயிஸ் ஆகியோர் நூர்லக வாசலில் மாலைசூட்டிகமிஷனர்களால் வரவேற்கபட்டு, மேளவாத்தியத்துடன் அழைத்துச் செல்லப்பட்டனர். பெண்கள், சிறுவர்கள் உட்பட பெருந்திரளான மக்கள் திறப்புவிழாவில் கலந்து கொண்டனர்.

நூல்நிலைய பிரதான வாசலில் ஆசிய பவுண்டேசன் ஞாபகக்ர்த்த கல்லை, ஆசிய பவுண்டேசன் டைரக்டர் திரு. ஜேம்ஸ் ஏச். நொய்ஸ் திரை நீக்கம் செய்துவைத்தார்.

நூலக மேல் மாடியில் அமெரிக்க் பகுதியை அமெரிக்க ஸ்தானிகர் திரு அன்ரூ வி. குரே, திறந்துவைத்தாா.

மந்திரி திருச்செல்வம் தொடர்ந்து கூறியதாவது: ஆசியாவில் முதன்முதலில் மேற்கிந்திய நூல்கள் யாழ்ப்பாணத்தில்தான் 60 வருடங்களுக்கு முன் தமிழில் மொழி பெயர்க்கப்பட்டன. இப்புத்தகங்களின் புகைப்படப்பிரதிகள், உலக தமிழ் ஆராய்ச்சி மகாநாட்டில காட்சிக்கு வைக்கப்படும். வடபகுதியில் அமெரிக்கன் மிஷனரிமார்கள் தமிழ் பிள்ளைகளுக்கு செய்த கல்விச் சேவையை என்றும் மறக்க இயலாது.

யாழ்ப்பாண மாநகரசபைத் தேர்தல்மிகவிரைவில் நடைபெறும், எல்லா வட்டாரங்களும் சரிசமனுக பிரிக்கப்படுவதோடு, சிறுபான்மைத் தமிழருக்கு சலுகையளிக்கப்படும். உங்கள் பிரதிநிதிகளை நீங்களே தெரிவுசெய்து சிறந்த நிர்வாகத்திற்கு வழி வகுக்கவேண்டும்.

நகரமண்டபத்தில் நடந்த தேநீர் விருந்தில், கலைநிகழ்ச்சிகள் இடம்பெற்றன.

## கனிஷ்ட பல்கலைக்கழக மசோதா நிறைவேறியது

கொழும்பு, வெள்ளி
உயர்தரக்கல்வி சட்டத்தின் கீழ் ஐந்து கனிஷ்ட பல்கலைக்கழகங்களை நிறுவுவதற்காக கல்வி மந்திரி திரு ஐ. எம். ஆர். ஏ. இரிய கொல்லை பிரதிநிதிகள் சபையில் கொண்டுவந்த மசோதாவை சபை இன்று ஏற்றுக் கொண்டது.

மந்திரி தம் மசோதாமீது பேசுகையில், நாட்டில் வருடா வருடம் சுமார் 40 ஆயிரம் மாணவர்கள் உயர்கல்வி பெறுவதற்காக முன்வருகிருர்கள். ஆனுல் அவர்களில் சுமார் ஆயிரம் பேருக்கே உயர்கல்வி பெறுவதற்கு வாய்ப்புகிடைக்கின்றது. இந்த மசோதா நிறைவேறி அமுலாகும் பட்சத்தில் புதிய பல்கலைக் கழகங்களில் ஏராளமான மாணவர்கள் மேற்கல்வி பெறவாய்ப்பு ஏற்படும் என்று குறிப்பிட்டார்.

### கொழும்பு பல்கலைக்கழகம்

கொழும்பு தெற்கு இரண்டாவது எம். பி. திரு. பெர்னுர்ட் சொய்ஸாவின்கேள்வியொன்றுக்கு கல்விமந்திரி இரியகொல்லை பதிலளிக்கையில் கொழும்புப் பல்கலைக்கழக மாணவர்களின் பிரச்னை குறித்து நாளைய தினம் கூடும் மந்திரி சபையில் ஆலோசனை நடத்திய பின்னர் சபையில் அறிக்கையொன்றை வெளியிடுவதாக வாக்களித்தார்.

கம்புறுபிட்டியா எம். பி. திரு. பேர்ஸி சமரவிக்கிரம பேசுகையில் வெள்ளக் கொடுமைபற்றி சபையில் பேசுவதற்கு தமக்கு 2 மணி நேர சந்தர்ப்பம் தரும்படி சபாநாயகரைக் கேட்டுக் கொண்டார். நாளைய தினம் மாலை 4-30 முதல் 6-30 வரை அவர் தமது கருத்துக்களைக் கூறுவதற்கு சந்தர்ப்பம் தருவதாக சபாநாயகர் திரு. ஷேர்லிகொரியா தெரிவித்தார்.

## ஜப்பானில் தொழிற் பயிற்சி

பண்டத்தரிப்பு, சனி
இளவாலையைச் சேந்த திரு. எஸ். மரியநியூமன் [21 வயது] ஜப்பானில் பிளாஸ்டிக் தொழிலில் பயிற்சி பெற ஜப்பான் சென்றுள்ளார். இவர் அங்கு டோக்கியோ, யோக்கோகாமா, ஒசாக்கா ஆகிய தொழிற்சாலைகளில் ஒரு வருட காலம் பயிற்சி பெற்று திரும்புவார்.

திரு. மரியநியூமன் இளவாலை என்றியரசர் கல்லூரி ஆசிரியர் வித்துவான் சந்தியாப்பிள்ளையின் மூத்த புதல்வரும் மேற்படி கல்லூரியின் பழைய மாணவருமாவார்.

## இலங்கைக்கு கிடைக்கும் ஐ. நா. உதவிகள்

### திரு. கிறமோவ் விளக்கம்

யாழ்ப்பாணம், சனி
உலக உணவு உற்பத்தித் திட்டத்தின்கீழ் இலங்கை இருவகையிலமைந்த உதவிகளைப் பெற்றுவருகிறது. சிரமதான அமைப்புமுறையிலும் வேலையற்ற வாலிபர்கள்குடியேற்றத்திட்டமுறையிலும் இந்த உதவிகள் கிடைக்கின்றன. இந்த இரு உதவி திட்டங்களாலும் இலங்கை சுமார் 8 லட்சத்து 25 ஆயிரம் [அமெரிக்க] டாலர் பெறுமதியான உணவைப்பெறுகிறது.

மேற்கண்டவாறு நேற்று யாழ். மத்திய கல்லூரியில் நடைபெற்ற ஐக்கிய நாடுகள் தினவிழாவில் பிரதம பேச்சாளராகக் கலந்து கொண்ட இலங்கையின் ஐ. நா. நிரந்தரப்பிரதிநிதி திரு. அன்ரெுலி கிறமொவ் பேசுகையில் தெரிவித்தார்.

வடபகுதி அரசாங்க அதிபர் திரு. வேணன் அபயசேகரா தலைமையில் இவ்விழா நடைபெற்றது. முகாந்திரம் திரு. இ. பீ. இராசையா வரவேற்புரை நடத்தினுர்.

திரு. வேணன் அபயசேகரா தமது தலைமையுரையில் குறிப்பிட்டதாவது:-

ஐ. நா. ஸ்தாபனம் உருவாக்கப்பட்ட 52வது வருடாந்த தினத்தை நாம் இன்று கொண்டாடுகின்ரேம். இந்த சந்தர்ப்பத்தில் நாம் ஐ. நா. சாசனத்தையும் ஞாபகப்படுத்திக்கொள்வது நல்லபலனை அளிப்பதாக இருக்கும். போரிலிருந்து மக்களைக்காப்பாற்ற இது உதவும். உலகில் ஐக்கியமும் அமைதியும் சமாதானமும் நிலவ இது வழி அமைக்கும் என்பதை இங்கு குறிப்பிட விரும்புகின்றேன். [ந. நி.]

## 'சரஸ்வதி சிலை நூலகத்தில் இடம்பெறும்'

### ஆனுல் முகப்பில் அல்ல

யாழ்ப்பாணம், சனி
யாழ்ப்பாணம் பொது ஜன நூல்நிலையு மேல் மாடியில் அமைக்கப்படும் கலைக்கூடத்தில் சரஸ்வதி சிலையொன்று அமைக்கப்படும். வெண்கலத்திஞல் உருவாக்கப்படும் இச்சிலை இன்னும் இரு மாதங்களில் இங்கு அமைக்கப்படும்.

இத்தகவலை நேற்று யாழ்ப்பாணம் நூல்நிலையத்தைத் திறந்து வைத்துப் பேசுகையில் அமைச்சர் திருச்செல்வம் வெளியிட்டார்.

இதுசம்பந்தமாக அவர் அங்கு மேலும் பேசுகையில் தெரிவித்ததாவது:-

இப்போது நூல்நிலைய முகப்பில் அமைக்கப்பட்டிருப்பது சாதாரண அலங்காரச்சிலையே. வேறெந்தப்பெயரும் கொண்டு இதனை அழைப்பது தவறு. பொது மக்கள் பலரும் நூல் நிலைய முகப்பில் சரஸ்வதி சிலையை அமைக்குமாறு கோருகின்றனர். இது தவருகும். தமிழர்களின் கலைத் தெய்வமான சரஸ்வதியை திறந்தவெளியில் அசுத்தப் படக்கூடியதாக நிறுவக் கூடாது என்பதே எனது கருத்து. அதனுல் தான் கலைக்கூடத்தில் பொதுமக்களின் வேண்டுகோளைப் பூர்த்திசெய்யுமுகமாக சரஸ்வதி சிலையை அமைக்குமாறு உத்தரவிட்டுள்ளேன்.

[ந. நி.

## கடத்தலுக்காக நெல் சேகரித்தால் தண்டனை

கொழும்பு, வெள்ளி
அரிசி அல்லது நெல்லை கடத்தல் செய்வதற்காக சேகரித்துவைப்பதை ஒரு தண்டனைக்குரிய குற்றம் என்று அரசாங்கம் அறிவிப்பதற்கு நடவடிக்கை எடுத்துள்ளது.

இத்தகவலை பிரதம மந்திரி திரு. டட்லி சேனநாயகா இன்று பிரதிநிதிகள்சபையில் தெரிவித்தார்.

இதுவரை இப்படி நெல்லை சேகரிப்பது குற்றமாகக்கருதப்படவில்லை. வெளிநாடுகளுக்கு உணவுப்பொருட்கள் கடத்தப்படுவதாக நம்பப்பட்டபோதிலும் அப்படியான சம்பவம் எதுவும்

நெல் மேலதிகமாக விளையும் ஒரு பிரதேசத்திலிருந்து இன்னெரு பகுதிக்கு கடத்தப்படும் சம்பவங்களும் இடம்பெறுகின்றன. இந்தக் காரணங்களால் கடத்தலுக்கென நெல்லை சேகரித்து வைப்பதை ஒரு குற்றமாக அரசாங்கம் அறிவிக்க முடிவு செய்திருக்கிறது என்று பிரதமர் கூறினுர்.

இந்த நடவடிக்கையை நடைமுறை சாத்தியமாக்குவதில் ராணுவத்தினரும், கடற்படை, ஆகாயப்படையினரும் உதவுவார்கள் என்றும் அவர் தெரிவித்தார்.


## இளைஞர்கள் தேவை

மிகவும் தரமான எங்கள் ரோறஸ் தேயிலையை வீடுகளுக்கு கொண்டு சென்று விற்பனை செய்வதற்கு கல்வியறிவுள்ள இளைஞர்கள் தேவை. ஊக்கமும் வல்லமையும் உள்ளவர்கள் நல்ல வருமானத்தை எதிர் பார்க்கலாம். சிறிய தொகை பிணைப்பணமாக கட்ட வேண்டியிருக்கும். நேரில் வந்து சந்திக்கவும்.

நந்தி இன்டஸ்ரீஸ் அன்ட் ஏஜென்ஸீஸ் லிமிட்டெட்,
''ரோறஸ் ரீ ஹவுஸ்''
20, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.


இப்பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேலைவீதி 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1967-ம் ஆண்டு நவம்பர் மாதம் 5-ந் திகதி அச்சிட்டுவெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org